மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 26 வெள்ளிக்கிழமை (11.09.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 289

# ஐக்கிய இலங்கைக்குள் உட்பட்டதாக

# 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் தீர்வு

## நாடாளுமன்றில் 2/3 பெரும்பான்மை ஆதரவு தேவை; அதன் பின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்திஉறுதிப்பாடு



யாழ்ப்பாணம், செப்ரெம்பர்11

★இனப்பிரச்சினைக்கு வகுக்கப்படும் தீர்வு, அரசமைப்புச் சட்டத்துக்கான பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் அமையும்.

★அந்தத் தீர்வு ஐக்கிய இலங்கைக்குள், அதனைப் பேணுவதாகவே இருக்கும்.

★உத்தேச தீர்வு குறித்து அனைத்துக் கட்சித் தெரிவுக்குழு முன்வைக்கும் திட்டத்துக்கு - யோசனைக்கு - ஜனாதிபதி ஒப்புதல் அளித்த பின்னர் அதனை நாடாளுமன்றம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றக் கோரப்படும்.

★அதனை அடுத்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி உறுதிசெய்யப்படும்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா முகாம்களில் இருந்து இன்று 6, 833 பேர் யாழ். அழைத்து வரப்படுவர்

யாழ்ப்பாணம், செப்.11

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவிலுள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ளவர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 6,833 பேரை இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவர உள்ளனர்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 35,000 பேரின் விவரங்கள் வவுனியா அரச அதிபரால் யாழ்.செயலகத் துக்கு அனுப்பப்பட்டிருந்தன.

அந்த விவரங்கள் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டு விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

முதலில் கிடைத்த கேட்கப்பட்டிருந்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரிடம் சரணடைந்த 49 புலிகள் நீதிமன்றத்தினூடாகப் புனர்வாழ்வு முகாமுக்கு

கொழும்பு, செப். 11

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் என்று தெரிவிக்கப்படும் மூன்று பெண்கள் உட்பட 49 பேரைப் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் மேலதிக நீதிவான் அயோஷா ஆப்தீன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

அவர்களை வெலிகந்தை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்புவதற்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த நபர்களை நீதிமன்றில் ஆஜர் செய்த பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் பிரசன்ன அல்விஸ், இவர்கள் புலிகள் இயக்கத்தில் இராணுவப் பயிற்சி எடுத்த நிலையில், வன்னிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது படையினரிடம் சரணடைந்தனர் என்று தெரிவித்தார். அவர்களை சிறைச்சாலைத் திணைக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி அகதிகள் நடத்தப்படும் விதம்; பிரிட்டிஷ் நாடாளுமன்றில் கவலை!

கொழும்பு, செப். 11

இலங்கையில் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகள் நடத்தப்படுகின்ற விதம் கவலையளிக்கின்றது என்று பிரிட்டிஷ் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் இவான் லீவிஸ் அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பில் பிரிட்டிஷ் பொதுச்சபையில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் இடம்பெயர்ந்த மக்கள் நடத்தப்படும் விதம் குறித்து பிரிட்டிஷ் அதிகளவு கவலையடைந்து வருகின்றது.

குறிப்பாக முகாம்களில் போதியளவு நடமாட்டச் சுதந்திரமின்மை, இடம்பெயர்ந்தவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் கட்டுப்பாடுகள், இடம்பெயர்வின்போது குடும்பத்தவர்களை பிரிந்த குழந்தைகளை மீண்டும் இணைத்தல் போன்ற விடயங்கள் குறித்து கவலையடைந்துள்ளோம்.

இலங்கையில் அதிகளவிற்கு தமிழ் மக்களைப் பாதிக்கும் ஆள்கடத்தல்கள், காணாமற்போதல், ஊடகங்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் குறித்து தொடர்ந்து வெளியாகும் தகவல்களாலும் நாங்கள் கவலையடைந்துள்ளோம்.

இந்த விடயங்கள் பற்றி இலங்கை அரசுடன் தொடர்ந்தும் பேச்சுகளை மேற்கொண்டு வருவதுடன், மனித உரிமை மீறல்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக்குற்ற நாடுகள் தொடர்பான ஐ.நாவின் வரைபடத்தில் இலங்கை

கொழும்பு,செப். 11

யுத்தக்குற்றங்கள் இடம்பெற்ற நாடுகளைக் காட்டும் ஐ.நாவின் வரைபடத்தில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது என 'இன்னர் சிற்றி பிரஸ்' செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இலங்கை குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனினும், பாதுகாப்புச் சபை இன்னமும் அதற்குப் பரிந்துரை செய்ய வில்லை எனவும் அதிகாரிகளை மேற்கோள்காட்டி 'இன்னர்சிற்றி பிரஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக 'இன்னர்சிற்றி பிரஸ்' மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

செப்ரெம்பர் 9 ஆம் திகதி நடந்த யுத்தக் குற்றங்கள் குறித்த பேச்சுகளின் போது இலங்கை குறித்தும் கருத்துத் தெரிவிக்கப் பட்டது. யுத்தக்குற்றங்கள் இடம்பெற்ற நாடுகள் தொடர்பான உலக வரைபடத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் பிரசன்னத்தைக் குறைக்குக; துணை இராணுவக் குழுக்களைக் கலைத்துப் பாதுகாப்பை ஏற்படுத்துக!

## நாடாளுமன்றில் சம்பந்தன் வலியுறுத்து



கொழும்பு, செப். 11

வடக்கு, கிழக்கில் இருக்கின்ற இராணுவ முகாம்கள், சோதனைச் சாவடிகள், அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் போன்றவற்றை அங்கிருந்து நீக்கி அங்கு புதிதாகப் படையினர் குவிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றில் அரசிடம் கோரிக்கை விடுத்தது.

அத்தோடு துணை ஆயுதக் குழுக்களை முற்றாகக் கலைத்து மக்களின் பாதுகாப்பை அதிகரிக்க வழிசெய்ய வேண்டும் என்றும் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்தது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட் டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

அகதி முகாம்களில் தடுத்துவைக்கப் பட்டிருக்கின்ற 2 லட்சத்து 80 ஆயிரம் மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கை மிகவும் மந்தமாகவே இடம்பெறுகின்றது.

180 நாள்களுக்குள் இம்மக்கள் மீள்குடியமர்த்தப்படுவர் என்று அரசு கூறியது. மூன்று மாதங்கள் கடந்து விட்டன. 10 வீதமான மக்கள் கூட இன்னும் குடியமர்த்தப் படவில்லை. இதை அரசிடம் நாம் சுட்டிக்காட்டினோம். ஆனால் அரசு விரைவில் செய்யமுடியும் என்று நம்பிக்கை தெரிவிக்கின்றது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஈராக்கில் குண்டுவெடிப்பு கிராமவாசிகள் 19 பேர் பலி!

மொசூல், செப். 11

வட ஈராக்கிலுள்ள குர்திஷ்களின் கிராமமொன்றில் நேற்று வியாழக்கிழமை ட்ரக் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு கள் பயங்கரமாக வெடித்துச் சிதறின. இவற்றில் 19 கிராமவாசிகள் கொல்லப்பட்டார்கள். 25 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என ஈராக்கிய பொலிஸ் வட்டாரம் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தது.

குண்டுகள் நிரப்பப்பட்ட ட்ரக்கொன்றை தற்கொலைதாரியொருவர் செலுத்திக் கொண்டு வந்து இக்கிராமத்துக்குள் குண்டுகளை வெடிக்க வைத்துள்ளார். இத்தாக்குதல்களில் தற்கொலைதாரியின் உடலும் வாகனமும் சின்னாபின்னமாக சிதறிவிட்டன என்றும் அவ்வட்டாரம் குறிப்பிட்டது.

வார்டெக் என்னும் கிராமத்தில் இந்த ட்ரக் குண்டுகள் வெடித்துள்ளன. தலைநகரான பக்தாத்துக்கு வடக்கே, 390 கிலோமீற்றர் (240 மைல்) தொலைவில் இந்த கிராமம் அமைந்துள்ளது. இங்கு குர்திஷ்களும், அரபுக்களும் செறிந்து வாழ்கிறார்கள். இவர்களுக்கிடையே எல்லை வரையறை, எண்ணெய்வள பங்கீடு ஆகியவை சம்பந்தமான பிரச்சினைகளும் உள்ளன என பொலிஸ் அதிகாரியொருவர் கூறினார்.

இக்குண்டுத் தாக்குதல்களில் பெண்களும், பிள்ளைகளும் பலியாகியுள்ளார்கள். அநேக வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. விடிவதற்கு முன்னர் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. காயமடைந்தோர் வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அநேகர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர். எனவே, மரணித்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் அச்சம் தெரிவித்தார்.

அதேவேளை, இதே கிராமத்தில் பிறிதொரு தற்கொலையாளி, இரண்டாவது ட்ரக் குண்டுத் தாக்குதலை மேற்கொள்ள முயன்றுள்ளார். அதற்கிடையில் அவர் உள்ளூர் குர்திஷ் விழிப்புக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதனால் மற்றுமொரு பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது என ஈராக்கிய பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

இதற்கு முன்னர் கிர்குக்கில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் ஒரே அரபுக் குடும்பத்தைச் சேர்ந்த எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு வீடு நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. கிர்குக்கிலும் அரபுகளுக்கும், சிறுபான்மையினரான குர்திஷ்களுக்கு மிடையே மோதல்கள் அவ்வப்போது இடம்பெற்று வருகின்றன என ஓரதிகாரி குறிப்பிட்டார்.

## நாகேஸ்வரத்தில் இன்று தேர்த்திருவிழா

வண்ணை, செப்.11

அளவெட்டி, நாகேஸ்வரம் நாகவரத நாராயணர் ஆலய தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து 12 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளி வீதியுலா வருவார். நாளை சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

இந்த ஆலய பெருந் திருவிழா கடந்த இரண்டாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

(203-160)

(சிறப்பு மலர் 11ம் பக்கத்தில்)

# மறைந்தும் சம்பாதிக்கும் பொப் பாடகர் ஜக்ஸன்!

லொஸ் ஏஞ்சல்ஸ், செப். 11

பொப் இசை உலகின் சக்கரவர்த்தியாக விளங்கிய மைக்கல் ஜக்ஸன் இறந்த பின்னரும் அவரது பாடல்களுக்கான மவுசு குறையவில்லை. இதனால் 2010 ஆம் ஆண்டில் அதிக வருவாய் ஈட்டும் நட்சத்திரங்களின் வரிசையில் அவர் முதலிடம் பிடிப்பார் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

மைக்கல் ஜக்ஸனின் த்ரில்லர் ஆல்பம் நடப்பாண்டில் இதுவரை 24 கோடி டொலர் வருவாய் ஈட்டியுள்ளது. அவரது மற்றொரு இசை ஆல்பமான ப்ளாக் ஓர் வைய்ட் விற்பனை சூடுபிடித்துள்ளது என கான்டாக்ட் மியூசிக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதே ரீதியில் மைக்கல் ஜக்ஸனின் பொப் இசை ஆல்பங்களின் விற்பனை தொடர்ந்தால், 2010 ஆம் ஆண்டில் அதிக வருவாய் ஈட்டிய நட்சத்திரங்களின் வரிசையில் ஜக்ஸன் முதலிடம் பிடிப்பார் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

மைக்கல் ஜக்ஸன் இறப்பதற்கு முன்னர், ஏ.ஈ.ஜி. நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த 'திஸ் இஸ் இட்' என்ற இசை நிகழ்ச்சியில் பாடுவதற்கு ஒப்புக் கொண்டார். ஆனால், அந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னரே மைக்கல் ஜக்ஸன் மரணமடைந்தார்.

இந்நிலையில், 'திஸ் இஸ் இட்' நிகழ்ச்சிக்காக மைக்கல் ஜக்ஸன் மேற்கொண்ட நடன ஒத்திகையின் வீடியோ காட்சிகளை திரைப்படமாக வெளியிட ஏ.ஈ.ஜி. நிறுவனம் திட்டமிட்டுள்ளது என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன.

# காந்தியே உண்மையான வீரர்: அமெ. ஜனாதிபதி ஒபாமா புகழாரம்

''மகாத்மா காந்திதான் உண்மையான வீரர்'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, வேர்ஜீனிய மாநிலத்திலுள்ள ஆர்லிங்டன் நகர வேக்பீல்ட் பாடசாலையில் நிகழ்ந்த விழாவொன்றில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.



இப் பாடசாலையில் 9ஆவது வகுப்பில் பயிலும் மாணவி லில்லி ஒபாமாவிடம், ''நீங்கள் எந்தத் தலைவருடன் சேர்ந்து விருந்துண்ண விரும்புகிறீர்கள்'' எனக் கேட்டார். இதற்கு ஒபாமா சட்டென, ''காந்தி'' எனப் பதிலிறுத்தார்.

ஒபாமா தொடர்ந்து பேசுகையில், ''காந்திதான் உண்மையான ஹீரோ. அவர் அஹிம்சைப் போராட்டம் மூலம் கோடிக்கணக்கான மக்களை ஈர்த்தவர். பல தலைமுறைகளாகஇளைஞர்களைக் கவர்ந்து இழுத்தவர். அவர் அதிகம் சாப்பிடமாட்டார். இதனால் அந்தச் சாப்பாடு மிகக் குறைந்த அளவாகத்தான் இருக்கும். அவர் தான் உண்மையான ஹீரோ. அஹிம்சைப் போராட்டம் மூலம் அவரே இந்தியாவுக்கு விடுதலை கிடைக்கச் செய்தவர்'' என்றார்.



''அவர் மட்டும் இந்தியாவுக்கு அஹிம்சைப் போராட்டத்தைத் தந்து இருக்காவிட்டால், அமெரிக்காவில் சிவில் உரிமைக்காக நடந்த அதுபோன்ற போராட்டமே வெடித்திருக் கும். என்னை மிகவும் ஈர்த்த தலைவர் அவர். காந்தி சாதாரண மனிதர்கள் ஒன்றுசேர்ந்து அசாதாரண செயல்களை செய்யமுடியும் என்று சாதித்துக் காட்டியவர். அதனால் தான் அவர் உருவப்படம் என். செனட் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது'' என்றும் அவர் தெரிவித்தார்.

## கண்ணீர் அஞ்சலி

புதிய உயர் கல்லூரி இயக்குநர்களான
திரு.திருமதி சண்முகநாதன் அருள்நங்கை அவர்களின் அன்பு மகன்

### சண்முகநாதன் சந்துதன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இணைப்புப் பெற்ற ஆசிரியர் ஒன்றியம்.



சர்வதேச பட்டப்படிப்பை
பெற்றுக்கொள்வதற்கான மாபெரும் இலவசக் கருத்தரங்கு

நீங்கள் பட்டதாரி ஆகவும் அல்லது உங்களின் பட்டப்படிப்பைச் சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தி வெளிநாட்டில் வேலைபெற்று உழைத்திடவும்.
உலகத்திலேயே முதல் தரம் வாய்ந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்திடவும்.
உங்களின் பட்டப்படிப்பை உங்களின் உழைப்பினிலே முடித்து வெளிநாட்டில் நல்ல வாழ்க்கையைத் தொடரவும்.

கொழும்பிலிருந்து வருகைதரும் துறைசார் வல்லுனர்களினால் நடத்தப்படுகிறது.

இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம் : 12.09.2009 சனிக்கிழமை
முற்பகல் 09.30 மணி

குறுகிய காலத்திலும், மிகக்குறைந்த செலவிலும் வெளிநாட்டில் படித்துப் பட்டம் பெற்றிட, பல இலகுவான வழிமுறைகளுடன் நாம் உங்களுக்கு வழிகாட்டக் காத்திருக்கின்றோம்.

100 %
விசா உத்தரவாதத்துடன்



உங்களின்
கனவை நாம்
நிறைவேற்றித் தருகிறோம்

இவற்றுக்கெல்லாம் விடைகாணவும்
உங்களின் கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும்
சரியான பதிலைப் பெற்றிடவும் விரையுங்கள்

யாருக்காக இந்தக்கருத்தரங்கு

பட்டதாரிகள், பட்டதாரி அல்லாதவர்கள், வெளிநாட்டில் வேலைசெய்து பட்டப்படிப்பை முடிக்க விரும்புகிறவர்கள், உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA), A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், மற்றும் தங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தை விரும்பும் பெற்றோர்கள், ஆர்வலர்கள்.

முந்துங்கள் கருத்தரங்குக்கு வருகை தரும் மாணவர்களுக்கு விசேட சலுகைகளும் கட்டணக்கழிவுகளும் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு
BCHS
No.15, Sirambiyadi Lane,
Off Stanley Road, Jaffna.
Tel: 021 2224550
HotLines: 0773501499 / 0777222422
Email: info@bchs.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தோட்டத் தொழிலாளர்களின் வேதனத்தை தீர்மானிக்க புதிய நடைமுறை தேவை

இந்த நாட்டின் அந்நிய செலாவணி சேமிப்புக்கு முதுகெலும்பாக விளங்கும் மலையகத் தோட்டத் தொழிலாளரின் சம்பளப்பிரச்சினை தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் இழுபறிப்படுகின்றது.

இப்பத்தி எழுதப்படும் சமயத்திலும் - நேற்று மாலையும் - இவ்விடயம் தொடர்பாக தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும் கூட்டு ஒப்பந்த தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் மூன்றாவது சுற்றுப் பேச்சுகள் நடைபெற ஏற்பாடாகியிருந்தன.

முதல் இரண்டு சுற்றுப் பேச்சுகளும் இணக்கம் காணப்படாமல் முடிவுற்ற நிலையில் நேற்று மூன்றாவது சுற்றிலும் உடனடியாகவே தீர்க்கமான - இணக்கமான - முடிவு எட்டப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருந்தன என்று நேற்று முற்பகலில் பேச்சுக்கு முன்னர் கூறப்பட்டது.

எது எப்படியென்றாலும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் - அடுத்த நான்கு நாள்களுக்குள் - இவ்விடயத்தில் ஏதேனும் ஒருமுடிவு வந்துவிடும் என்று தாங்கள் நம்புகின்றார்கள் என மேற்படி பேச்சுகளில் பங்குபற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இலங்கையில் வறுமை நிலை உயர்வாக உள்ள பிரதேசம் மலையகமே. அந்தப் பிரதேசத் தோட்டத் தொழிலாளர்களே இலங்கையில் அதிகம் பின்தங்கிய மக்களாக உள்ளனர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. நாடு முழுவதும் வறுமையின் வீதம் 14 ஆக இருக்க மலையகத்தில் மட்டும் அது 34 வீதமாக உயர்ந்து நிற்கின்றது.

உண்மையில், இலங்கையில் அபிவிருத்தியும், உதவியும், ஊக்குவிப்பும் விரைந்து வழங்கப்பட வேண்டிய பிரதேசமாக மலையகமே உள்ளது. ஆனால் அந்த மக்களின் - தோட்டத் தொழிலாளர்களின் - அடிப்படை வேதனம் குறித்துக் கூட எவரும் சிந்திக்கின்றவர்களாக - அக்கறை காட்டுபவர்களாக - இங்கு இல்லை என்பதே உண்மை.

இப்போது சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் பற்றிய விடயம் பெரும் சர்ச்சையாக உருவாகி இழுபடுகின்றது. 2007 இல் அவர்களின் நாள் சம்பளம் சுமார் இருநூறு ரூபாவாகத் தீர்மானிக்கப்பட்டு கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த ஒப்பந்தத்துக்கான செயற்காலம் காலாவதியாகி சுமார் ஆறு மாதங்கள் கடந்து விட்டன. இன்னும் கூட வெறும் இரு நூறு ரூபா நாள் சம்பளத்துடன் அவர்கள் கையேந்தி அவலப்படும் நிலைமை நீடிக்கின்றது. இத்தகைய சொற்ப வேதனத்துடன் அவர்களைப் பணிக்கு அமர்த்தி இழுத்தடிப்பது அநியாயத்திலும் அநியாயமாகும்; அக்கிரமத்திலும் அக்கிரமமாகும்.

இந்த மலையக மக்களுக்கு உரிய காலத்தில் - உரிய வேதன உயர்வை - பெற்றுத்தர முடியாத, பெற்றுத்தர வக்கற்ற இந்தக் கூட்டு ஒப்பந்த முறையால் அந்த மக்களுக்கு என்ன பயன்? இப்படி மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு உரிய காலத்தில் - உரிய முறையில் - தீர்வு காண்பதற்கான வாய்ப்பை வழங்காத இந்தக் கூட்டு ஒப்பந்த முறைமை இனியும் தொடரத்தான் வேண்டுமா? - என்ற கேள்வி மலையக மக்களிடம் எழுவது நியாயமானதே.

அத்தோடு இத்தகைய கூட்டு ஒப்பந்த ஏற்பாடு மூலம் மலையகத் தொழிலாளர்களின் வேதனத்தைத் தீர்மானிக்கும் முறைமை குறித்து பல்வேறு விமர்சனங்களும் காட்டமாக முன்வைக்கப்படுகின்றமை இச்சமயத்தில் கவனிக்கத்தக்கதாகும்.

ஒருசில தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மட்டும் இப் வேதன அளவைத் தீர்மானிக்கும் கூட்டத்தில் பங்குபற்றும் அதிகாரத்தைத் தம்வசம் வைத்துக்கொண்டு ஆட்டம் போடுவது நியாயமற்றது. பல - காத்திரமான - தொழிற்சங்கங்களின் கருத்துகளும், நிலைப்பாடுகளும் உள்வாங்கப்படாமல் ஒரு சில தொழிற்சங்கங்களின் நிர்வாகிகளிடம் முழுப் பொறுப்பும், அதிகாரமும் ஒப்படைக்கப்படுவது தவறு. அத்தகைய அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அதை வைத்துக்கொண்டு, மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்காகத் தாங்கள் போராடுவார் கள் என வெளிவேஷத்துக்குக் காட்டிக்கொண்டு, முதலாளி மாருடன் மறைவில் இணக்கத்துக்கு வந்து, பெரும் தொகையை சுருட்டிக்கொண்டு, தொழிலாளர்களைக் காட் டிக் கொடுத்து விடுகின்றனர் - என்றெல்லாம் கூட முறைப்பாடுகள் கூறப்படுகின்றன. அவற்றில் உண்மை இருக்கலாம். உண்மை இல்லாமல் போகலாம்.

தொழிலாளர்கள் சார்பில் தொழிற்சங்க விடயங்களுக்காகப் பேச்சு நடத்துவது என்பது வெகு நுட்பமான விடயம்.

'நூறு பெறவேண்டுமென்றால் நூற்றியைம்பது கேட்க வேண்டும். அப்போதுதான் நூறாவது கிடைக்கும்' - என்பார்கள்.

இதுபோலவே மலையகத் தோட்டத் தொழிலாளரின் வேதனமும் நாளொன்றுக்கு 450 ரூபாவாகவாவது இருக்கவேண்டும் என்றால் ஐந்நூறு ரூபாவாக அதைக் கேட்டால்தான் இழுபறிப்பட்டு, சற்றுக் கீழிறங்கி இணக்கத்துக்கு வருவார்கள். அப்படி இணக்கத்துக்கு வந்ததும் 'தினசரி ஐந்நூறு ரூபாவாக வேதனம் உயர வேண்டும்' என வற்புறுத்திய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இப்போது முதலாளிமார்களுடன் மறைமுக இணக்கத்துக்கு வந்து, பெரும் தொகையைக் களவாகச் சுருட்டிக்கொண்டு, விட்டுக்கொடுத்து, ஐந்நூறு ரூபாவுக்குக் குறைந்த தொகை நாள் வேதனத்துக்கு இணங்கிவிட்டார்கள் என்று எதிரணியில் இருந்து சேற்றை அள்ளி வீசுகின்றார்கள். - இப்படி இன்னொரு தரப்பில் விசனம் கூறப்படுகின்றது

கடந்த தடவையும் - 2007 இலும் - இப்படி மலையகத் தொழிலாளரின் வேதனம் தொடர்பான விடயத்தில் தோட்ட உரிமையாளர் சம்மேளனத்துக்கும் கூட்டுத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கருத்து வேற்றுமை வந்தபோது அதில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவே தலையிட்டு ஒரு தீர்வை ஏற்படுத்த வேண்டியவரானார்.

இந்த விடயங்களைச் சீர்தூக்கிப் பார்க்கையில் மலையகத் தோட்டத் தொழிலாளரின் வேதனத்தைத் தீர்மானிக்கும் விடயத்துக்குத் தற்போதைய கூட்டு ஒப்பந்த நடைமுறைக்குப் பதிலாகப் புதிய பொறிமுறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம் என்பது தெளிவாகின்றது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் சர்வகட்சிக் குழுவில் இணைத்துக் கொள்ள அரசு தீவிர முயற்சி

## யாழ்.வந்த அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப்.11

ஐக்கிய தேசிய கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய இரு கட்சிகளையும் இனப்பிரச்சினைக்கான சர்வகட்சித் தெரிவுக் குழுவில் இணைத்துக் கொள்வதற்கு அரசாங் கம் தீவிர முயற்சிகளை மேற்கொண் டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்திருந்த விஞ்ஞானத் தொழில்நுட்பத்துறை அமைச்சரும் இனப்பிரச்சினைக்கான அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸவிதாரண இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற விஞ்ஞான தொழில்நுட்பவள நிலையங்களின் உறுப்பினர்கள் மற்றும் பிரதேச செயலர்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நான் பல்கலைக்கழக மாணவனாக இருந்த போது 1957 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தேன். பின்னர் கடந்த 2004 ஆம் ஆண்டு மருத்துவக் குழுவினருடன் யாழ்.வந்து இங்குள்ள மக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கினேன்.

1957களில் முன்வைக்கப்பட்ட தீர்வுகளை ஏற்றிருந்தால் இன்று எமது நாட்டில் இத்தகைய நிலை ஏற்பட்டிருக்காது.

இங்கு தனிநாடு கேட்பது பிரச்சினைக்கு வழிவகுக்குமே தவிர அது தீர்வுக்கு வழிசமைக்காது. இந்தியாவில் தமிழ்நாடு என்பது இந்திய அரசின் ஒரு பிரிவாக மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால் அங்கு பிரச்சினை எதுவுமில்லாமல் மக்கள் இருக்கின்றார்கள்.

நாங்கள் அனைவரும் ஒரு நாட்டின் பிரஜைகள். இங்குதமிழ், முஸ்லிம், பறங்கியர், சிங்களவர் என்ற வேறுபாடுகளின்றி எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வினை முன் வைக்க வேண்டும். அதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் தேசியப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பாரிய பொறுப்பினை என்னிடம் ஒப்படைத்துள்ளார்.

சர்வகட்சி தெரிவுக்குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள நான் இது வரை 13 அரசியல் கட்சி களை ஓர் இணக்கப்பாட்டு சர்வகட்சியாக இணைத்துள்ளேன். இந்த சர்வகட்சிக் குழுவில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் கருத்துக்களை - குறிப்பாக தீர்வுத்திட்டம் தொடர்பான திட்டமுன்மொழிவுகளை சுருக்கமான முறையில் தயாரித்து ஆவணமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளேன்.

அந்தத் தீர்வுத்திட்ட ஆவணம் உயிரோட்டம் பெறும்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எல்லா இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நீதியான தீர்வென்றினை முன்வைப்பார் என்ற நம் பிக்கை எமக்கு உள்ளது.

இந்தச் சர்வகட்சிக் குழுவில் ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆகிய இரு கட்சிகளும் அங்கம் வகிக்கவில்லை. விரைவில் அந்த இரு கட்சிகளையும் இணைத்துக் கொள்வதற்கு தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம்.

இலங்கை மிகவும் வறிய நாடாகவே சென்று கொண்டிருக்கின் றது. தாய்வான், சிங்கப்பூர் போன்ற நாடுகள் வறிய நாடுகளின் பட்டியலில் இருந்து துரிதமானவளர்ச்சி நிலையினைப் பெற்று செல்வந்த நாடுகளின் தரவரிசை யினை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கின்றன.

கொரியா முன்னர் இலங்கை யினை விட பின்தங்கிய நிலையில் நின்றது. ஆனால் அங்கு ஏற்பட்ட விஞ்ஞானத் தொழில்நுட்ப கைத் தொழில் புரட்சி காரணமாக அதுவும் ஒரு செல் வந்த நாடாக வளர்ச்சியடைந் துள்ளது.

எனவே எமது நாட்டினையும் ஒரு புரட்சிகரமான கைத்தொழில் வளர்ச்சியில், விஞ்ஞானத் தொழில்நுட்பத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்த ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ இந்த ஆண்டினை விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப ஆண்டாக பிரகடனப் படுத்தியுள்ளார் - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 8 விஞ்ஞான தொழில் நுட்பவள நிலையங்களுக்கான குளிர் சாதனப் பெட்டிகளை அமைச்சர் திஸ்ஸ விதாரண யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷிடம் கையளித்தார். (50-9)

# பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழா இன்று நண்பகலில்

யாழ்ப்பாணம், செப்.11

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று நண்பகல் 12 மணியளவில் சுவாமி தேரில் எழுந்தருளி வீதியுலா வருவார்.

பிற்பகல் 1.30 மணிக்கு உறியடி உற்சவம் இடம்பெறும்.

இரவு 10 மணியளவில் கிருஷ்ண ஜெயந்தியும் இரவு 12 மணிக்கு அபிஷேகம், பூசை, உற்சவம், தாலாட்டு, பஜனை என்பனவும் இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

காலை 9 மணிக்கு திருவடி நிலைக்குக் புறப்படல் இடம்பெற்று அங்கு தீர்த்தம் இடம்பெறும். மாலை 6 மணிக்கு கொடியிறக்கம் இடம் பெறும்.

13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் ஆஞ்சநேயர் பொங்கலும் இடம் பெற்று ஆஞ்சநேயருக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறும். மாலை 6 மணிக்கு திருக்கல்யாணம் இடம் பெறும். ஆலயத்திற்கு பக்தர்கள் சென்று வருவதற்கு ஏற்றவகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.



படை யினர் இதற்கான அனுமதிகளை வழங்கியுள்ளனர் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (203-28-112)

(சிறப்பு மலர் 9 ஆம் பக்கத்தில்)

# யாழ்ப்பாணம் - கொழும்பு தரைவழிப் போக்குவரத்து; மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்க

## மக்கள் குழு பஸிலிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்.மக்கள் கொழும்புக்குச் சென்று திரும்பி வருவதில் உள்ள போக்குவரத்து நடைமுறைகளை மாற்றி அமைத்து அவர்கள் சிரமமின்றி ஒரே பஸ் சேவை மூலம் கொழும்புக்குச் செல்லவும், அங்கிருந்து திரும்பி வரவும் ஏற்பாடு செய்து உதவுமாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

ஏ-9 தரை வழிப்பாதையை திறப்பதற்கு ஏற்பாடு செய்தமைக்காக ஜனாதிபதி செயலணிக் குழுவின் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷவுக்கு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு பாராட்டுத் தெரிவித்துள்ளது. அத்துடன் இந்த நெடுந்தூரப் பயணத்தை மேற்கொள்வதில் மக்கள் அனுபவிக்கும் இடர்பாடுகளைச் சுட்டிக்காட்டி அவைகளைத் தீர்த்து வைக்கும் படியும் அந்தக் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷவுக்கு மக்கள் குழு அனுப்பியுள்ள கடிதத் தில் பின்வரும் விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

* பாதுகாப்புத் துறையினரின் அனுமதி பெறுவதில் ஏற்படும் தாமதங்கள்.
* வவுனியாவில் பயணிகள் நீண்ட வரிசைகளில் 'ரோக்கன்' பெறு வதற்காக விடியற்காலை 3 மணியிலிருந்து தவம் கிடக்க வேண்டியுள்ளமை. அதிகாரிகள் தமது பணிகளை 8.30 மணிக்கே ஆரம்பிப்பதால் மாலை வரை பயணிகள் காத்திருக்கும் நிலைமை
* பிரயாண நிலையங்களில் போதுமான விளக்கங்கள்,. அறிவித்தல் பலகைகள் மூலம் வழங்கப்படாமை.
* பஸ்களில் பயணிகள் பல மணி நேரம் மந்தைகள் போன்று அடைத்து வைக்கப்படுகிறார்கள். இயற்கைக் கடன்களை கழிப்பதற்கோ சுவாசிப்பதற்கோ போதுமான வசதிகள் இல்லை. பிரயாணத்துக்கு எடுக்கும் நேரத்துக்கு மேலாக இது அமைகிறது.
* இடையில் ஓர் இடத்திலாவது நிறுத்தப்படாமல் பயணிப்பது இயற்கைக்கடன் கழிப்பதற்கு-குறிப்பாக நோயாளிகள், வயதானவர்கள், சிறுவர்கள் போன்றவர்களுக்குப் பெரிதும் சிரமம் தருவதாக உள்ளமை.
* [illegible] நகருக்கு மிக நேரம் [illegible] பஸ் வந்து சேருகின்றது. பயணிகள்வீடு சென்றடைவதில் பெரும் சிரமம் அடைகிறார்கள். முச்சக்கரவண்டிப் பயணம் அதிக செலவு பிடிக்கிறது.
* கொழும்பிலுள்ளவர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு பஸ் பயணம் மறுக்கப்படுகின்றது.
* இவைகளை சுட்டிக் காட்டியுள்ள மக்கள் குழு இது விடயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்து முறையான நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும்-என்று கேட்டுள்ளது. (ப)

| நாளை | |
|---|---|
| ஆவணி 27 | 12.09.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | அட்டமி |
| | பி.ப. 4.30 வரை |
| நட்சத்திரம்: | மிருகசீரிடம் |
| | பி.இ. 01.28 வரை |
| சுபநேரம்: | 03.03 - 04.33 |
| ராகுகாலம்: | 09.03 - 10.33 |

## உல்லாசத்துறை குறித்த கலந்துரையாடல் சனியன்று

யாழ்ப்பாணம், செப்.11

உல்லாசத்துறையை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்பாடி ஹோட்டலில் இடம் பெறவுள்ளது.

இத்துறைசார்ந்தோர் எதிர்நோக்கும் பிரச்சனைகள் குறித்து ஆராய்ந்து நிர்வாக ரீதியான அமைப்பு ஒன்று உருவாக்குவது தொடர்பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்படவிருக்கின்றது.

விடுதி உரிமையாளர்கள் மற்றும் உல்லாசத்துறைசார் நிர்வாகிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## போருட் வெளிவாரி பட்டப்படிப்பு அலகு தம்பசிட்டி பருத்தித்துறை

புதிய ஆண்டுக்கான கலை முதற் பிரிவு (G.A.Q) விரிவு ரைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் பதிவுகளை உடன் மேற் கொள்ளவும். விரிவுரைகளின் நேர விவரங்கள் பின்னர் அறிவிக் கப்படும்.

(C/560863) நிர்வாகத்தினர்.

நவீன தொழில்நுட்பங்கள், Advanced Video Editing மென்பொதிகளையும் உள்ளடக்கிய தமிழ் மொழி விளக்கங்களுடனான 100% online வகுப்புகள்

50% special offer மூலமான முழுமையான Video Editing கற்கை நெறி

## Diploma in Video Production & Multimedia

Introduction to Digital Video, Adobe Premiere Pro CS3, particleIllusion, Pinnacle Studio, COOL 3D Studio, Adobe After Effects, Nuendo, & VCD Cutter

Duration : 2 Months

அனைத்து கற்கைநெறிக்குமான விசேட பிரிவுகள் ஆரம்பம்

ஒரு கற்கை நெறிக்கு, பதிவு செய்யும் முதல் 200 மாணவர்களுக்கு நிபந்தனைகள் எதுவுமின்றி Internet E-mail or Hard ware Technology Course முற்றிலும் இலவசம்!

12/9/2009 - சனி
16/9/2009 - புதன்
Time 10 a.m

## DMI COMPUTER EDUCATION

NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021- 222 4403

## 24 வது ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

## கலாலயா

பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

### மகளிருக்கான துரித 3 மாதகால பயிற்சிகள்

- **கேக் ஐசிங்,** Sugar Flowers, Fondant, மற்றும் ஏனைய ஐசிங்வகைகள்.
- **உணவு தயாரித்தல்** (கேக் வகைகள், பீஸா, Pastry, சிற்றுண்டிகள், ஈற்றுணவுகள்)
- **பப்றிக் வர்ணம் தீட்டுதல் :** துணிகளில், கண்ணாடியில், சேலையில் (Saree Painting)
- **கை வேலை :** கம்பளி நூல், Soft Toys, கழிவுத் துணிகளில் வேலைப்பாடுகள்.
- **பூ வேலை :** கடதாசி, துணி, Paper Ribbon, ஜெலற்றின், கபாயா மலர்கள் செய்தல்
- Saree Work : சேலையில் முத்துக்கள், சுயிக்கின்ஸ் கட்டுதல், Net Work செய்தல்
- **கூந்தல் அலங்காரம் :** 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், வெட்டுதல், சுருட்டுதல், நிறமூட்டுதல், Perming.

மேற்படி பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில் Facials (முக அழகுக்கலைகள்) மணப்பெண் அலங்காரங்கள், சேலை உடுத்தும் முறைகள், கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல் (Manicure, Pedicure). ஆரம்பமாகும்.

- தையல் அடிப்படை அறிவு அற்றவர்களுக்கான **6 மாதகால உடை தயாரித்தல் (தையற் கலை) பயிற்சிகள்** (அடிப்படைத்தையலுடன் குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான ஆடைகள், சாரிபிளவ்ஸ் தைத்தல்)
- ➡ பயிற்சிகள் முடிந்தபின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தையல் தெரிந்தவர்களுக்கான **இருவாரகால** சாறி பிளவுஸ், சுரிதார், கவுண், சட்டை, Skirts தைத்தல்.
- ➡ மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.

**கிழமை நாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 16-09-2009**
**சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 20-09-2009** } காலை 9.00 மணி

*மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.*

## விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.11

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் கல்வி கற்கும் சகல மாணவர்களுக்குமான (முழு, பகுதி நேர) விசேட கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்கு தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறும். (06)

## பாரதி நினைவு தினம்

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் சமூகவியல் சமூக ஏற்பாட்டில் பாரதி நினைவு தின நிகழ்வுகள் இன்று முற்பகல் 10.30 மணிக்கு சமூக வியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் நிகழ்வை ஆரம்பித்து வைக்க தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, 'சமூக மாற்றத்திற்கான பாரதியின் சிந்தனைகள்' எனும் தலைப்பில் உரையாற்று வார். நிகழ்வின் இறுதியில் 'பாரதி' சிறப்புத் திரைப்படமும் காண்பிக்கப்படவுள்ளது. (06)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 14 - 11 - 1933



விண்ணில் 23 - 08 - 2008

### பொன்னையா திருநாவுக்கரசு

திதி: ஸப்தமி(11.09.2009)

அன்பின் அண்ணாவே!

ஐயாவே! ஒரு ஆண்டு அல்ல நாம் உயிரோடு இருக்கும் வரைக்கும் எங்கள் தெய்வத்தை மறக்க முடியுமா?

நீங்கள் இன்றும் எம்மோடு தான் இருக்கிறீர்கள்.

3/1, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்: நாகேஸ்வரன் வள்ளி குடும்பத்தினர். (88782)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 09 . 06 . 1924



விண்ணில் 14 . 06 . 2009

### திருமதி பாறிப்பிள்ளை செல்லையா

பிறந்தவர் இறப்பது நியதி
எனினும் தாங்க முடியவில்லையே
-உங்கள் பிரிவை
உறுத்துது எமது உள்ளங்களை
உருக்குது மனதை நாள்தோறும்...

கடந்த 14.06.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அரசடி வீதி, இருபாலை, கோப்பாய்

என்றும் உங்கள் நினைவுடன்
தவரத்தினம் குடும்பத்தினர்,
திருமதி சந்திரசேகரம் குடும்பத்தினர். (88773)

## யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

காலம்: 13.09.2009 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : பிற்பகல் 4 மணி

இடம் : பாடசாலையின் பிரதான மண்டபம்.

பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
கந்தரோடை, சுன்னாகம். (88779)

## கண்ணீர் அஞ்சலி

யா/ புனித ஹென்றியரசர் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் பகுதித் தலைவருமான

*அருட்சகோதரி பிலிப்புப்பிள்ளை கனிசியஸ்*

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருறுகின்றோம். அருட்சகோதரி அவர்களுக்கு இறைவன் நித்திய சாந்தி அளித்திட பிரார்த்திப்பதுடன் எமது கல்லூரிக் குடும்பம் சார்பாக அஞ்சலி செலுத்துகின்றோம்.

கல்லூரிக் குடும்பம்
யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை (88772)

## மரண அறிவித்தல்

### *யோசையா யோகராஜா*

யாழ்ப்பாணம், குருசோ வீதியைப் பிறப்பிடமாகவும் 56/3,பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட யோசையா யோகராஜா (09.09.2009) பிரான்ஸில் காலமாகி விட்டார்.

அன்னார் கந்தையா-திரேசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம்-செல்லாச்சி தம்பதியினரின் பாசமிகு மருமகனும், இராசமலர் (அந்தோனியம்மா) வின் அன்புக் கணவரும், றொனிக்கல் (பிரான்ஸ்), ஜெஸ்மின் கலிஸ்ரா(யூலி-டென்மார்க்), வடிஸ்மீரா (பிரான்ஸ்), கட்சன்சரத்(பிரான்ஸ்), ஜொய்லின் சுவைனி (கொழும்பு), காலஞ்சென்ற உமாதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், பற்றிசியா (கொழும்பு), குமார் (டென்மார்க்), காந்தன் (பிரான்ஸ்), ஜென்சி (பிரான்ஸ்), ஆதீஸ்வரன் (கொழும்பு), ஆகியோரின் மாமனாரும், சர்மி றொனிசியா, சஜின் மிருஷா, விதுஷன், அன்றியா, அன்றிச்சன், அன்பிறிமி, கவுதம், ஷாரு, செபானா, ஆஸ்ரிகா, அஸ்வினி, அகலியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பிரான்ஸில் நடைபெறும்.

56/3, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் (88789)

தகவல்:யோ.றொனிக்கல் (மகன்- பிரான்ஸ்)
T.P.0033667679120

## புதிய மாணவர்களுக்கான ஆங்கிலப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப்.11

யாழ். பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவக் கற்கை நெறிக்கு புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கான ஆங்கிலப் பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (6)

## அறை வாடகைக்கு உண்டு

வெள்ளவத்தையில் படிக்கும், வேலை செய்யும் ஆண்களுக்கு அறை வாடகைக்கு உண்டு.

071 5175957

## தவறிவிட்டது

நூலகவீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம் என்னும் முகவரியைச் சேர்ந்த இரத்தினேஸ்வரி அம்பலவாணர் என்பவரது தேசிய அடையாள அட்டை (426171554V) 26.08.2009 ஆம் திகதி தட்டாதெருவுக்கும், ஸ்ரீலங்கா புத்தகசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுன்னாகம் பொதுநூலகத்திற்கு நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும்.

## தவறிவிட்டது

செல்வி க. விஜியராணி (826692146V), செல்வி ந. குமுதினி (818112785V) ஆகிய இருவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, தொழில் அடையாள அட்டை ஆகியவை ஆரிய குளம் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில் தொலைந்துவிட்டன.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அப்பலோ கண் வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோட்டுக்கொள்கிறோம். சன்மானம் வழங்கப்படும்.

## தேவை

யாழ்.நகரில் Mobile Phone விற்பனை நிலையம் ஒன்றுக்கு Cashier, Sales, Technician போன்ற பிரிவுகளில் வேலை செய்வதற்கு முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

Celot Private Limited
077 1770724 , 077 078577

## மரண அறிவித்தல்கள்

### *பாலசுப்பிரமணியம் குகநேசன் (கோணேஸ்)*



(பிரபல வர்த்தகர், திருநெல்வேலி)

சாவகச்சேரி , கோயில்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் சுதுமலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் குகநேசன் (கோணேஸ்) நேற்று( 10.09.2009) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை கிழக்கு, சுதுமலை. (88774)

தகவல்: றஞ்சி (மனைவி), பிள்ளைகள், சகோதரர்கள்.

### திருமதி *மார்க்கண்டு பொன்னம்மா*



இல.47, இராணி வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு பொன்னம்மா 07.09.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் நடராஜாவின் அன்புச் சகோதரியும் யோகேஸ்வரி, திலகேஸ்வரன் (தம்பி-நோர்வே), நகுலேஸ்வரன் (சிறி-நோர்வே), காலஞ்சென்ற மதிவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும் க.வடிவேல் (அதிபர், யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்), தேவநாயகி (செல்லா-நோர்வே), நிர்மலாதேவி (மலர்-நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கயேந்திரா (பொறியியலாளர், லண்டன்), வியேந்திரா, வனஜா (ஆசிரியை, யா/வேம்படி உயர்தரப் பாடசாலை), லோபனா, சுஜேந்திரா, ரசிகா (நோர்வே), ராகேஸ் (நோர்வே), நிஷான் (நோர்வே), நிவேதா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2009) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மு.ப.10 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொலைபேசி இலக்கம்:*
0602734030, 0774146181-இலங்கை
004790944960, 004790524151 -நோர்வே

தகவல்: குடும்பத்தினர்.
இல.47, இராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (88774)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜி.சீ.ஈ சாதாரணதரம் 2008 பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற நல்லூர் சயன்ஸ் அக்கடமி மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள். ஆசிரியர் தமிழ்மாறன், இணைப்பாளர் சரா புவனேந்திரன் ஆகியோர் உரையாற்றுவதையும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் எஸ்.ஸ்ரீமோகனன் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதையும் கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## யாழ். சுகாதாரத்திணைக்களத்துக்கு மருந்து வகை மற்றும் சத்துணவு

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு ஒரு தொகுதி மருந்து வகைகளும் மற்றும் திரிபோஷா மா பைக்கற்றுக்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

ஏ-9 தரைப்பாதையூடாக இந்தப் பொருள்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கொண்டு வரப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது தரைப்பாதையூடாக வாகனம் மூலம் மருந்துப் பொருள்கள் அடிக்கடி வந்து சேர்வதால் அவற்றுக்கான பற்றாக்குறைகள் நீங்கியுள்ளதாக சுகாதார சேவைகள் வட்டாரங்கள் தெரிவித்தன.(203- 224)

## செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.11

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நடனபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வும் தரம் 10, 11 ஆகிய வகுப்புகளில் சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணிப்பீட்டுச் செயலமர்வும் எதிர்வரும் 12,13 ஆகிய திகதிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

## உள்ளூராட்சி சபைகளை உள்ளடக்கிய கண்காட்சியில் கலாசார விழுமியங்களை வெளிப்படுத்தும் காட்சிப்படுத்தல்கள்

யாழ்ப்பாணம்,செப்.11

உள்ளூராட்சி சபைகளை உள்ளடக்கி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள கண்காட்சியில் கலாசாரம் மற்றும் பிரதேசங்களின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் வகையிலான காட்சிப்படுத்தல்கள் இடம் பெறவுள்ளன.

அத்துடன் ஆயுள்வேத மருத்துவப் பொருட்காட்சிகளும் இடம்பெறவுள்ளன. உள்ளூராட்சி ஆணையாளர் எம்.ஜோன்சன் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி ஆணையாளர் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் பிரதேச சபையின் செயலாளர்கள், பிரதேச சபையின் உப அலுவலகப் பொறுப்பதிகாரிகள் ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்றை அண்மையில் நடத்தினார்.

இந்தக் கலந்துரையாடலின் போதே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணத்தில் இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

கண்காட்சியைத் தொடர்ந்து யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பரிசளிப்பு நிகழ்வும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கண்காட்சியின்போது விற்பனைக் கூடங்களும் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு உள்ளூராட்சி உத்தியோகத்தர்களிடையே உள்ளூராட்சி தொடர்பான கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளதாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. (203-131)

## சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கிரிக்கெட் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,செப்.11

இலங்கை கிரிக்கெட் சபையின் யாழ். மாவட்ட பயிற்றுனரால் கிரிக்கெட் பயிற்சி முகாம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அதிபர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

தென்மராட்சிப் பாடசாலைகளில் கிரிக்கெட்டை வளர்ச்சியடையச் செய்யும் நோக்குடன் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கத் தலைவர் நோயல் விமலேந்திரனின் வேண்டுகோளுக்கமைய மேற்படி பயிற்சிமுகாம் ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

இதேவேளை கைதடி நவீல்ட் பாடசாலையிலும் பயிற்சி முகாம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பயிற்சிகளைப் பெறவிரும்பும் பாடசாலை மாணவர்கள் டிறிபேக் கல்லூரி, நவீல்ட் பாடசாலை அதிபர்களைத் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் அறிவித்துள்ளார். (203-201)

## சுயதொழில் கொடுப்பனவு

சித்தங்கேணி,செப்.11

சமூக சேவைத் திணைக்களத்தால் வழங்கப்படும் மாற்றாற்றல் உடையோருக்கான சுயதொழில் கொடுப்பனவு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 13 பயனாளிகளுக்கு கிடைக்கப்பெற்று வழங்கப்பட்டுவருகிறது.

முதற்கட்டமாகத் தலா இருபதாயிரம் ரூபா வீதம் வழங்கப்படுவதாகவும் இந்தக் கொடுப்பனவைப் பெறாத பயனாளிகள் செயலகத்துடன் தொடர்புகொண்டு கொடுப்பனவைப் பெறுமாறும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.வி.அருந்தவராஜா தெரிவித்துள்ளார். (201-112)

## நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டோர் தொழில் வசதி எதுவுமின்றி பெரும் நெருக்கடியில்

வலி.வடக்கு,செப்.11

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு யாழ்.குடாநாட்டில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் வாழும் பல குடும்பங்கள் தொழில் வசதி இன்றித் திண்டாடும் நிலமையில் காணப்படுகின்றார்கள்.

சிறிய பிள்ளைகளுடன் உள்ள இளம் குடும்பங்கள் எந்தவகையான தொழில் வசதிகளும் இன்றி பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இளம் வயதினைஉடையவர்கள் தொழில் செய்யவேண்டும் என்ற ஆர்வத்துடன் இருக்கின்ற போதிலும் தொழில் செய்வதற்கு வேண்டிய வசதி இன்மையால் எதனையும் செய்யமுடியாத நிலைமையில் காணப்படுகின்றார்கள்.

இவர்களின் நலனில் உரிய அதிகாரிகள் அக்கறை எடுத்து கடன் உதவிகள் செய்யும் சந்தர்ப்பத்தில் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (203- 86)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## வலி.கிழக்குப் பிரதேசத்தில் பசுப்பாலின் விற்பனை திடீரென வீழ்ச்சி காணப்படுகிறது

யாழ்ப்பாணம்,செப்.11

வலி.கிழக்குப் பிரதேசங்களில் பசுப்பாலின் விற்பனை திடீரென வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது என்று கோப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

முன்னர் இப் பிரதேசங்களில் பசுப்பாலுக்கு பெரும் கிராக்கி நிலவியது.

தற்போது பசுப்பால் உற்பத்தி அதிகரித்து விற்பனையின்றி தேங்கிக் கிடக்கும் நிலை காணப்படுகின்றன.

இந்த வீழ்ச்சியைப் போக்குவதற்கு தற்போது ஒரு லீற்றர் 50 ரூபாவாக விற்கப்படும் பாலை 40 ரூபாவுக்கு குறைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேசமயம் பால்மா வகைகளின் விலைகள் குறைந்து காணப்படுவதாலேயே பசுப்பாலின் விற்பனை வீழ்ச்சியுறுவதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. (203- 224)

## உள்ளூராட்சி கண்காட்சியை முன்னிட்டு மாணவர்களிடையே பல்வேறு போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.11

வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினர் ஒக்டோபர் மாதத்தில் நடத்தவுள்ள உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சி ஆகியவற்றை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையில் கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளனர்.

மத்திய பிரிவில் தரம் 08,09,10 ஆகிய வகுப்பு மாணவர்களும், மேற்பிரிவில் தரம் 11,12,13 ஆகிய வகுப்பு மாணவர்களும் பங்குபற்றலாம்.

மாவட்ட ரீதியாக வெற்றிபெறுவோர் தெரிவு செய்யப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசில்களும் மேலும் பத்துப் பேருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

மாணவர்களால் சுயமாக எழுதப்பட்ட ஆக்கங்கள் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பிராந்திய உதவி உள்ளூராட்சி அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

போட்டிகளுக்கான ஆக்கங்களின் தலைப்புகளின் விவரம் வருமாறு:

கட்டுரை

*மேற்பிரிவு:* நல்லொழுங்கு முறைகளை ஸ்திரப்படுத்தல், நல்லாட்சித் தத்துவங்களும் பயன்களும், பிரதேச அபிவிருத்தியில் உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்பு, உள்ளூர் ஜனநாயகத்தை மேம்படுத்தல்.

*மத்திய பிரிவு:* உள்ளூராட்சி மன்றங்களின் உவப்பான சேவைகள், பிரதேச வளர்ச்சியில் மக்களின் பங்களிப்பு, உள்ளூர் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாத்தல், இன்றைய உள்ளூராட்சி மன்றங்களின் நிலை.

கவிதை

மேற்பிரிவு: வளமான வாழ்விற்கு உள்ளூராட்சியின் பங்களிப்பு, உள்ளூராட்சி மன்றங்களின் மகத்தான சேவைகள், கருவில் இருந்து கல்லறைவரை உள்ளூராட்சி சேவை, உள்ளூர் அபிவிருத்தியின் மறுசீரமைப்பின் தேவை.

*மத்திய பிரிவு:* எங்கள் ஊரும் உள்ளூராட்சியும், உள்ளூராட்சியின் மகத்துவம், மக்கள் நலன்பேணும் உள்ளூராட்சிச் சேவை, உள்ளூராட்சியே உந்து சக்தியாம்.

சிறுகதை

உள்ளூராட்சி மன்றங்களின் நிலை செயற்பாடுகள், போக்குகள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக சிறுகதைகள் அமைய வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

## மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப்.11

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மதுபோதையில் ஒரே மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் சாவகச்சேரி நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சாவகச்சேரி பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடத்திய திடீர்ப் பரிசோதனையின் போது மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையில் கைது செய்யப்பட்டனர்.

இந்த மூவரும் கடந்த புதன்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை விபத்து ஏற்படக்கூடிய வகையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு 4ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (203-207)

## தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.11

கொக்குவில் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கொக்குவில் லயன்ஸ் கழகத்துடன் இணைந்து நடத்தும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் யாழ்.பல்கலைக் கழக கல்வியற்றுறை பேராசிரியர் மா.சின்னத்தம்பி, ஈசொவ்ற் கணனி நிறுவன இணைப்பாளர் மாணிக்கம் சயிலேந்திரா ஆகியோர் கருத்துரை வழங்குவர். (203-201)

## விடுவிக்கப்பட்ட நெல்வயல்களூடாகச் செல்லும் மண் அணையை அகற்றுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.11

காலபோக நெற்செய்கைக்கு விடுவிக்கப்பட்ட நெல்வயல்களூடாகச் செல்லும் மண் அணையை அப்புறப்படுத்தித் தருமாறு நெற்செய்கையாளர்கள் கேட்டுள்ளனர்.

நுணாவில் மத்தி வைரவர் கோயிலடி வயல் தொடக்கம் மறவன்புலோ மேற்கு வரை ஏழு கிலோ மீற்றர் தூரத்திற்கு உள்ள மண் அணையினையே அகற்றுமாறு கோரியுள்ளனர்.

பெருமளவு வயல்கள் ஊடாக மண் அணை செல்வதால் காலபோக நெற்செய்கை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படுவதாகவும் விதை[illegible] மண் அணை[illegible] வயல்களை பண்படுத்தி நெற்செய்கை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். (203-207)

## குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.11

தென்மராட்சிப் பிரதேசத்தில் இரு குளங்கள் 'கமநெகும' திட்டதின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

கல்வயல் சில்லாரைக்குளம், நாவற்குளி கிழக்கு கோம்பயன்கிராய் குளம் ஆகியவையே புனரமைக்கப்படவுள்ள [illegible]ப்பட்டது. (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஓகஸ்ட் மாத நிவாரணம்

யாழ்ப்பாணம், செப்.11

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு ஓகஸ்ட் மாதத்துக்கான (26 நாள்களுக்கான) உலர் உணவு நிவாரணம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் 11.08.2006 இற்குப் பின்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கான ஓகஸ்ட் மாதத்துக்கான நிவாரணமும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அரிசி, மா, பருப்பு, சீனி, சமையல் எண்ணெய் போன்ற பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

### நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டோருக்கான நிவாரணம்

| பொருள் விவரம் | 1 அங்கத்தவர் | 2 அங்கத்தவர் | 3 அங்கத்தவர் | 4 அங்கத்தவர் | 5 அங்கத்தவர் | 6 அங்கத்தவர் | 7 அங்கத்தவர் | 8 அங்கத்தவர் | 9 அங்கத்தவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரிசி (கிலோ கிராம்) | 5.200 | 10.400 | 15.600 | 20.800 | 26.000 | 31.200 | 36.400 | 41.600 | 46.800 |
| கோதுமை மா (கிலோ கிராம்) | 5.200 | 10.400 | 15.600 | 20.800 | 26.000 | 31.200 | 36.400 | 41.600 | 46.800 |
| பருப்பு (கிலோ கிராம்) | 1.560 | 3.120 | 4.680 | 6.240 | 7.800 | 9.360 | 10.920 | 12.480 | 14.040 |
| சீனி (கிலோ கிராம்) | 0.520 | 1.040 | 1.560 | 2.080 | 2.600 | 3.120 | 3.640 | 4.160 | 4.680 |
| மரக்கறி எண்ணெய் (கிலோ கிராம்) | 0.520 | 1.040 | 1.560 | 2.080 | 2.600 | 3.120 | 3.640 | 4.160 | 4.680 |
| மொத்தம் (கிலோ கிராமில்) | 13.000 | 26.000 | 39.000 | 52.000 | 65.000 | 78.000 | 91.000 | 104.000 | 117.000 |

### 11.08.2006இன் பின் இடம்பெயர்ந்தோருக்கானது

| பொருள் | அங்கத்தவர் எண்ணிக்கை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 அங் | 2 அங் | 3 அங் | 4 அங் | 5 அங் | 6 அங் | 7 அங் | 8 அங் | 9 அங் |
| அரிசி | 5.600 | 11.200 | 16.800 | 22.400 | 28.000 | 33.600 | 39.200 | 44.800 | 50.400 |
| மா | 5.600 | 11.200 | 16.800 | 22.400 | 28.000 | 33.600 | 39.200 | 44.800 | 50.400 |
| பருப்பு | 1.680 | 3.360 | 5.040 | 6.720 | 8.400 | 10.080 | 11.760 | 13.440 | 15.120 |
| சீனி | 0.560 | 1.120 | 1.680 | 2.240 | 2.800 | 3.360 | 3.920 | 4.480 | 5.040 |
| எண்ணெய் | - | - | - | - | - | - | - | - | - |

### மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில்

# ஜி.சீ.ஈ உயர்தர கணித, விஞ்ஞான ஆசிரியருக்கு பாட ரீதியாகச் செயலமர்வு

யாழ்ப்பாணம், செப்.11

மாகாணக் கல்வித் திணைக்களம், தேசியக் கல்வி நிறுவகம், யாழ்.பல்கலைக் கழகம் ஆகியவற்றுடன் இணைந்து ஜி.சீ.ஈ உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளை நடத்தவுள்ளது.

இந்தச் செயலமர்வு காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பாட ரீதியாகத் தனித்தனியாக நடைபெறவுள்ளது.

இணைந்த கணிதம், இரசாயனவியல் பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பௌதிகவியல், உயிரியல் பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

செயலமர்வுக்கு சமுகமளிப்போர் புதிய பாடத்திட்டக் கைநூலைக் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

செயலமர்வில் கலந்து கொள்வோருக்கு அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

(203-201)

# நிவாரணக் கிராமங்களிலுள்ளோரை பொறுப்பேற்க இலவச படிவங்கள்

## திங்கள் முதல் செயலகத்தால் விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.11

நிவாரணக் கிராமங்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் உறவினர்களை குடும்பங்களாக அல்லது தனியார்களாக பொறுப்பேற்க விரும்புபவர்கள் யாழ். மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஆகிய அலுவலகங்களில் இலவசமாக விநியோகிக்கப்படும் மாதிரிப்படிவத்தை பெற்று விண்ணப்பிக்குமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்

எதிர்வரும் திங்கட் கிழமை தொடக்கம் இதற்கான படிவங்கள் விநியோகிக்கப்படும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். விண்ணப்பப்பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு உரிய அலுவலர்களால் உறுதிப்படுத்தப்பட்டு தத்தமது பிரதேச செயலகங்களிலும், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கையளிக்கப்பட வேண்டும்.

இதற்கான அங்கீகாரம் தகுதிவாய்ந்த அதிகாரிகளிடமிருந்து கிடைத்த பின்னர் உரியவர்களுக்கு பொது அறிவித்தல் வழங்கப்படும் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (203-201)

# கசிப்பு வைத்திருந்தோருக்கு 40 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், செப்.11

கசிப்பு வைத்திருந்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 40ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த இருவருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்குகள் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் மற்றவருக்கு 15 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டு அபராதத் தொகை செலுத்தத் தவறின் முறையே 25 மாதம், 10 மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு நிதிவான் உத்தரவிட்டார்.

(203-207)

# வடக்குக் கிழக்கு கடற்றொழிலாளரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மீன்பிடிக் கட்டுப்பாடுகள் முற்றுமுழுதாகத் தளர்த்தப்பட வேண்டும்

## நாடாளுமன்றத்தில் சிறில் எம்.பி.கோரிக்கை



கொழும்பு, செப்.11

வடக்கு- கிழக்குக் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு தற்போது உள்ள மீன்பிடிக் கட்டுப்பாடுகளை அரசு முற்றுமுழுதாகத் தளர்த்த வேண்டும். இதன் மூலம் மீனவர்களின் பொருளாதாரக் கஷ்டங்கள் நீக்கப்படுவதுடன் நாட்டின் தேசிய வருமானமும் அதிகரிக்கும்.

இவ்வாறு குறிப்பிட்டார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில்.

நாடாளுமன்றத்தில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற கடற்றொழில் நீர்வளத்துறை அமைச்சு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்குக் கிழக்கு தமிழ்த்தேசத்தைச் சார்ந்த கரையோரப் பகுதி மக்கள், குறிப்பாக கடற்றொழிலாளர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை விஸ்தரிக்கவும் சுதந்திரமாக அவற்றை மேற்கொள்ளவும் இந்தப் பாரிய தடைகள், கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளபோதும் முற்றுமுழுதாக நீக்கப்பட்டுள்ளது என கூறுவதற்கில்லை.

வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் கடல்வளமும் தொழில்வளமும் முற்றுமுழுதாகப் பயன்படுத்தப்படுமானால் நாட்டின் கடல் உணவுகளுக்குத் தட்டுப்பாடும் விலையேற்றமும் நீங்குவதுடன் போதிய வருமானத்தை கடற்றொழிலாளர்கள் பெறக்கூடியதாகவிருக்கும். அதே வேளையில் தேசியவருமானத்தையும் அதிகரிக்க அதிக வாய்ப்புக்களும் உண்டு.

### தடைகளும் கட்டுப்பாடுகளும் இப்போதும் உள்ளன

போர் முடிந்துவிட்டது. பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை, விவசாயத் தடை, தொழில் புரியும் தடை, கடற்றொழில் தடை ஏன் மக்களின் வாழ்வியல் தடை போன்ற அனைத்துத் தடைகளும் முற்றுமுழுதாக நீக்கப்பட்டு வடக்கின் வசந்தத்தை மக்கள் அனுபவிக்கின்றார்கள் என அரசு கூறுகின்றது, அமைச்சர்கள் கூறுகின்றார்கள், அரச அதிகாரிகள் கூறுகின்றார்கள். உண்மையில் அங்கு என்ன நடக்கின்றது, தொடர்ந்தும் தடைகளும் கட்டுப்பாடுகளும் தட்டுப்பாடுகளும் எல்லா விடயங்களிலும் இருக்கத்தான் செய்கின்றது.

### சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும்

சகல மீன்பிடிக் கலங்களும் இரவு நேரங்களில் வெளிச்சத்துடன் தரித்து நிற்க வேண்டும். வழமையான மரக்கலங்களில் ராடார் வெளிச்சக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். 15 குதிரைவலுவுள்ள இயந்திரங்கள் மாத்திரம் தொழிலுக்குப் பாவிக்கலாம். இரவு நேரங்களில் மீன்பிக்கச் செல்லவோ அல்லது திரும்பி வருவதற்கோ அனுமதியில்லை. இதுதான் வடபிராந்திய கடற்படை கட்டளைத் தளபதியின் கண்டிப்பான கட்டளை. இத்தனைக்கும் மத்தியில் கரையோரப்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கும் இராணுவ அரண்களுக்கும் முட்கம்பி வேலிகளுக்கும் குறைவே கிடையாது.

வடக்குக் கிழக்கில் சிறிய அளவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு அன்றாடம் வருமானம் தேடுவோர் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் குறித்து எவரும் கவனத்தில் கொள்வதாகவில்லை. எனவே அவ்வாறானவர்களுக்கு துரித நிவாரணங்களை வழங்கவும் தொடர்ந்தும் தங்கள் தொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல உதவுவது மிகமிக அவசியமானது.

### கடல்வளம் நிறைந்த முல்லைத்தீவில் மக்களை விரைவில் மீளக் குடியமர்த்த வேண்டும்

அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மிகுந்த கடல்வளம் நிறைந்த மாவட்டம். அங்கு வாழ்ந்த மக்கள் பெரும் தொழில் செய்து பெருவாழ்வு வாழ்ந்தவர்கள். இன்று உயிர்காப்பிற்காக முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கின்றார்கள். அவர்களது உழைப்பும் உறுதியும் வீணாகக்கூடாது. அவர்கள் வெகுவிரைவில் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என்றார்.

(50)

# உடுவில் டச்சு வீதியில் தாலிக்கொடி அபகரிப்பு

வலி.வடக்கு, செப்.11

உடுவில் டச்சு வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி அறுத்துச்செல்லப்பட்டுள்ளதாக, சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இந்த திருட்டுச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள், அப்பகுதி வீதியில் நடந்து சென்று கொண்டு இருந்த பெண்ணின் தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு சென்றுள்ளார்கள்.

பெண் கூக்குரலிட்ட போதிலும் உடன் அயலில் உள்ளவர்கள் வராமையினால் திருடர்கள் தப்பிச் சென்றுள்ளார்கள்.

(203- 86)



விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸவிதாரண யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று பிரதேச செயலர்கள், விதாதாவள நிலைய உறுப்பினர்களைச் சந்தித்த போது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் திருமதி எக்கநாயக்க [illegible] விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண உரையாற்றுவதையும் தெரிவு செய்யப்பட்ட விதாதா வள நிலையங்களுக்கான குளிர்சாதனப் பெட்டிகளை அமைச்சர் அரச அதிபரிடம் கையளிப்பதனையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஓங்காரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்: சரவணன்)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய பெருந்திருவிழாவின் சப்பரத் திருவிழாவில் மின்னொளி பொருத்தப்பட்ட அழகிய சப்பரத்தில் முருகப் பெருமான் வீதி உலா வரும் காட்சி.
(எஸ்.ஜி.மூர்த்தி)



நவாலி வடக்கு தேற்றா மரத்தடி ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகமும் சகஸ்ரநாம (1008) அர்ச்சனை வழிபாடும் அண்மையில் இடம்பெற்றன. கும்பாபிஷேகக் கிரியைகளை பிரதம குருமார் நடத்துவதைக் காணலாம்.



கோப்பாய் பழைய வீதி மனோன் அம்பாள் (நாச்சிமார் கோயில்) ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரம்மஸ்ரீ வை.நித்தியானந்தசர்மா உரையாற்றுவதையும் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு வைத்திய கலாநிதி வை.தியாகராசா பரிசில் வழங்குவதையும் அருகில் ஆசிரியர் கந்தசத்தியதாசன், பிரம்மஸ்ரீ கந்தராஜேஸ்வர சர்மா ஆகியோர் நிற்பதையும் காணலாம்.

# பொன்னாலையில் தேரேறி பொழிந்திடுவாய் நல்லருளை!



போயவனே! பொன்னாலைப்
பதியுறையும் மாயவனே!
போதும் இப்பூவுலக வாழ்வு
புரிந்திடு உன்னடியில்
நான் வாழும் பேறை...!
முப்பிறவியில் யான் செய்த
முன்ஊழ் அனைத்தும்
இப்பிறவிதனில் எனை
அண்டாமல் காத்திட
இருட் கேசவா துணையிருப்பாய்
ஊனமில் சக்கரம் கொண்டு
உயிர்களைக் காத்திடும்
உந்தி பூத்தோனே! உபேந்திரனே!
இத் தரையில் இட்டிமையில்லா
நல்வாழ்வு நாம் வாழ்ந்திட - இன்று
சித்திரத் தேரேறி பக்தர்களுக்கருள் புரிவாய்!

செ.ரவிசாந், குப்பிளான்.

(இன்று 11.09.2009 வெள்ளிக்கிழமை பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேரேறி வந்து தன் பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். அதனையொட்டி இந்த ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது)

# வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது பகுதிகளைப் பார்வையிட அனுமதிக்குக

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, செப். 11

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களது பிரதேசங்களுக்குச் சென்று பார்வையிட அனுமதி வழங்கப்படவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புவேண்டுக்கோள் விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் குறைநிரப்புப் பிரேரணையின் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரிய நேந்திரன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தற்போது இடம்பெற்றுவரும் மீள்குடியேற்றங்களின்போது அந்தப் பிரதேசங்களில் ஏற்கனவே வசிக்காத சிலரும் மீள்குடியேற்றப்படுகின்றனர் என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

சம்மாந்துறை வலக்காப்பட்டியவிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்லும்போது சிங்களவர்களாலும் ஊர்காவல் படையினராலும் விரட்டி அடிக்கப்படுகின்றனர்.

இந்த நிலை நாட்டில் நீடிக்குமானால் மீண்டுமொரு இனக்கலவரம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். அத்துடன், பருவ மழைக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்து மாறு ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்டது. அந்த மக்கள் விரைவில் மீள்குடியமர்த்தப்படுவர் என நாங்கள் நம்புகின்றோம்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் ஆயிரத்து 500 பேர் மேற்கொண்ட கவனயீர்ப்புப் போராட்டத்திற்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் - என்றார். (சி)

# மனோவலிமையை வளர்ப்பதற்கு தோல்வியும், துன்பங்களும் தடைக்கல்லல்ல

உலகில் உள்ள அனைவரும் வாழ்க்கையில் விரும்பும் பொருள் வெற்றி. நாம் ஆன்மீக ஒளியையோ அல்லது எந்தவொரு துறையையோ நாடும் பொழுது அதில் வெற்றிபெற வேண்டும் என்றே முனைப்பாக இருக்கின்றோம். நாம் தோல்வியுற விரும்புவதில்லை. அதே நேரம் வெற்றி எல்லோரையும் சென்றடைவதுமில்லை. வாழ்க்கையில் மிகச் சில மக்களே வெற்றிபெறுகின்றனர். பலர் ஓரளவு வெற்றியடைகின்றனர். இன்னும் சிலர் தொடர்ச்சியான தோல்விகளைத் தழுவி மனமுடைந்து போகின்றனர்.

மனித வாழ்க்கையிலே வெற்றி, தோல்வி என்பன இருகூறுகளாகத் தோன்றிய போதிலும் ஒவ்வொரு விடயத்திலும் ஒரு பொதுக்கூறு சம்பந்தப்பட்டுள்ளது. அதுதான் மனோசக்தி, மனோவலிமை, இம்மனோ சக்தியை குழந்தைப் பருவத்திலிருந்தே வளரச் செய்யப்பட வேண்டும். கல்வியின் ஒரு பகுதியாக இது ஊட்டப்பட வேண்டும். மனோ சக்தியைக் குழந்தைப் பருவத்திலிருந்து பெற இயலாதவர்கள் எந்தப் பருவத்தில் என்றாலும் வளர்த்தெடுக்க முயற்சிக்க வேண்டும். இப்பயிற்சியைப் பெறுவதன் மூலம் தனிமனித வாழ்விலும், சமுதாய வாழ்விலும் மிக உயர்ந்த மேலான மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஒருவனுக்கு மனோவலிமை இல்லாத பட்சத்தில் அவனுடைய எல்லாத் திறன்களும், குணநலன்களும், முயற்சிகளும் பயனற்றதாகிவிடும்.

மனோசக்தி என்றால் என்ன என்பதை ஆராய்வோமானால் நாம் தேர்ந்து எடுக்கப்பட்ட செயல்களை உறுதியான முறையில் செய்யவும், தேர்ந்தெடுக்கப்படாத செயல்களை உறுதியான முறையில் தவிர்க்கவும் உதவும் கருவியாக உள்ளது. சாதகமான, சாதகமற்ற எல்லாச் சூழ்நிலையிலும் எந்தச் சக்தி நம்மைச் சரியானதைச் செய்ய வைக்கிறதோ தவறானவை என்று அறிந்து செய்யவிடாமல் தடுக்கிறதோ அதுவே அந்த மனத்தின் சக்தி நிலையாகும். ஒருவன் நல்லவனாகவோ, உண்மையானவனாகவோ, தூய்மையானவனாகவோ, பலம்பொருந்தியவனாகவோ இருப்பதற்கு காலம் தாமதமாகி விட்டது என்று கூற முடியாது. மனோசக்தியின் வளர்ச்சியில் காலம் எப்போதும் குறுக்கே நிற்பதில்லை.

ஞானக்கதிர்

நாம் எக்கணத்திலும் உடைந்து போகக்கூடிய பலவீனமான நாணல்ல என்பதை எப்போது அறிந்து கொள்கின்றோமோ அப்போது தான் நமது மனதில் இருக்கும் உண்மைக்கு எதிரான மயக்கத்திலிருந்தும், பொய்த்தோற்றத்திலிருந்தும் விடுபட்டு உண்மையான சக்தியை, மனோ வலிமையை வெளிப்படுத்த முடியும்.

எனவே மனோ சக்தியை வளர்ப்பதற்கு உறுதியான நம்பிக்கை வைக்க வேண்டும். எம்முடைய முழு ஆன்மாவுடன் நாம் நேரான பாதையில் சென்றுகொண்டிருக்கின்றோம் என்பதை நம்ப வேண்டும். எந்தவொன்றைப் பார்த்து சந்தேகப்படக்கூடாது. சொந்த ஆன்மாவின் மேல் எல்ல வல்லமையையும் கொண்டு நம்பிக்கை வைக்க வேண்டும். அப்போதுதான் மனோ சக்தி வீரியத்துடன் வளர்ச்சியடைகின்றது. ஒருவர் நேர்மையுடன் செயற்படும்போது, அவனுள்ளே இருக்கும் ஆன்மாவின் செயற்பாடு அவனது மற்றைய எல்லாச் செயல்களையும் ஒழுங்குபடுத்துகின்றது.

எவனொருவன் சிந்தனையில், செயலில், நடத்தையில் தன்னைத்தானே ஒழுங்குபடுத்திக் கொள்கின்றானோ அல்லது ஒழுங்குபடுத்திக் கொள்ளத் தெரிந்து கொள்கிறானோ அவனது ஏனைய செயற்பாடுகள் எளிதாகிவிடும். "சரியான செயல்களை இப்பொழுதே செய்துவிடு" இதுவே நாம் நம் மனத்திற்கு ஒவ்வொரு நாளும் இடும் கட்டளையாக இருக்கவேண்டும். நம்மால் எது சரி எது பிழை என முடிவு செய்ய முடியாவிட்டால் குரு அல்லது பெரியோரை அணுகி ஆலோசனையைப் பெற்று அவர்களின் வழிகாட்டலின்படி நடக்கவேண்டும். இவ்வாறு நாம் தினசரி வாழ்க்கையில் சுயபண்பாட்டைப் பேணுவதிலும் சுயமேம்பாட்டிலும் மற்றும் உடல், மன, ஆன்மீக நிலையிலும் தமது செயற்பாட்டைத் திட்டமிட்டு அதன் வழி செயற்பட வேண்டும்.

நமது மனோவலிமையை வளர்ப்பதற்குத் தோல்வியும் துன்பங்களும் தடைக்கல்லாக அமைந்து விடக்கூடாது. தொடர்ந்துவரும் துன்பங்களைக் கண்டு நம்பிக்கையிழந்து விடக்கூடாது. தோல்விகளை ஏற்றுக்கொண்டு அவற்றை வெற்றிப்பீடத்தை அடைவதற்கான படிக்கட்டுகளாக மாற்றவேண்டும். அந்தப் படிக்கட்டுகளைச் சரியான முறையில் உபயோகித்தால் மனோ வளர்ச்சியின் உச்சகட்டத்தை அவ நிச்சயமாக அடைய முடியும்.

(நன்றி-அருள்ஒளி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டப் பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ்த் தினப் போட்டியில் எழுத்தாக் கம் தவிர்ந்த ஏனைய போட்டி முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

போட்டிகளும், முதல்மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களதும் பாடசாலைகளினதும் விவரம் வருமாறு:

**வாசிப்பு:**

பிரிவு 1- சுஜீபா பிரதீபன்- சுன்னாகம், நிதுஷா குகநேசன்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி., கி. விதுர்ஷன்- யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை.

பிரிவு 2- நிரோஜினி சிதம்பரநாதன்- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, ஷோபா ஜெகநாதன்- பருத்தித்துறை, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட சாலை, தி. சேயோன்- யாழ். இந்துக் கல்லூரி.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு, கதை கூறல்**

பிரிவு 1 - துளசிகா மூர்த்தி- யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, மதுரங்கா ரவிச்சந்திரன்- சாவகச் சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, வைஷ்ணவி பிரதீபன்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

**பேச்சு**

பிரிவு 1 - மேதா முத்துக்குமார்- யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, கீர்த்தனா பரம லிங்கம்- நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தி யாலயம், சாமந்தி கணேசலிங்கம்- கரண வாய் மணியகாரன் தோட்ட வித்தியாலயம்.

பிரிவு 2 - மோகனதாரணி மகேந்திர நாதன்- மானிப்பாய் மகளிர் கல்லூரி, சி. ஜலுசன்- யாழ் இந்துக் கல்லூரி, செல்வ ராசா தாரங்கன்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

பிரிவு 3 - ரவீந்திரன் சஞ்சிவ்- கொடி காமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், நவ கீதா சிவநேசன்- மானிப்பாய் மகளிர் கல் லூரி, க. ஜஸ்மிதா- கொக்குவில் இந்துக் கல்லூரி.

பிரிவு 4 - சி. திருமகள்- யாழ். வேம் படி மகளிர் கல்லூரி, சாம்பவி சிவாஜி - உடுவில் மகளிர் கல்லூரி, பாலேந்திரன் சுமந்தன்- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.

பிரிவு 5 - வண்ணமயில் நிரோஷன்- யாழ். மத்திய கல்லூரி, புனிதத்தயாபரன் திருமாறன்- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, இலக்ஷா வேலும்மயிலும்- எழுது மட்டுவாழ் அ.த.க பாடசாலை.

**பா ஓதல்**

பிரிவு 1- மதுராங்கணி நந்தகோபால்- யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, மிதுலா சிவநேசன்- மீசாலை வீரசிங்கம் மகா வித் தியாலயம், பானுஜா பாஸ்கரன்- கர வெட்டி மாணிக்கவாசகர் வித்தி யாலயம்.

பிரிவு 2 - அமிர்தவர்சினி- மானிப் பாய் மகளிர் கல்லூரி, மனோகரி சுப்பிர மணியம்- காரைநகர் யாழ்ரன் கல்லூரி, ம. பிரியந்தி- யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

பிரிவு 3 - தயானி மகேந்திரன்- ஆனைக் கேட்டை றோ.க.த.க, கே. பிரி யங்கி- யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை, நிலாம்பரி செல்வச் சந்திரன்- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

பிரிவு 4 - கோபிகா ஜெயக்குமரன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, லோஜிதா லோகநாதன்- புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தி, க. டனிஷியா- யாழ். வேம்படி மக ளிர் கல்லூரி.

பிரிவு 5- அருள்நிலா அருட்செல்வம்- பருத்தித்துறை வட இந்து மகளிர் கல் லூரி, அனுசுதா- யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, தசாங்கன் சுந்தரமூர்த்தி- தெல் லிப்பழை யூனியன் கல்லூரி.

**இசையும் அசைவும்**

பிரிவு 1 - கு. பவித்திரா- யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, யூட்சிறொ பிசா சால்ஸ் றொபேட்- கொடிகாமம் அ.த.க, தனுஷியா ஜெயரூபன்- பண்டத்தரிப்பு பெண்கள் கல்லூரி, சங்கவி பிரதீபன்- புலோலி புற்றளை மகா வித்தியாலயம்.

**இசை - தனி**

பிரிவு - 2 - இ. கீர்த்திகா - புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி, ராஜன் சயந்தன் - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, கிஷோதா ஜெகநாதன் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

பிரிவு- 3 - கஜேந்திரன் சிவராசா- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யே. மதூசிகன்- கொக்குவில் இந்துக்கல்லூரி, கமலேஸ்வரன் பூங்குன்றன்- வரணி மகா வித்தியாலயம்.

பிரிவு- 4- கு.மயூரதி- யாழ். இந்து மக ளிர் கல்லூரி, கௌசிகன் பத்மநாதன்- பருத் தித்துறை ஹாட்லிக் கல்லூரி, ரமேஷ் கேதீஸ்வரன் - எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை.

பிரிவு- 5 - ரஞ்சினி வைரவன்- சுழி புரம் விக்ரோறியாக் கல்லூரி, கு.பிரணவன் - யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி, சுப்பிரமணி யம் விசாகன் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

**இசைக்குழு- 1**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி.

**இசைக்குழு- 2**

பருத்தித்துறை 'ஹாட்லிக்கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி. (வரும்....)


### யாழ்.வண்ணை

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

**ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்**

**(இன்று 11.09.2009 வெள்ளிக்கிழமை)**

கண்ணன் அடியார்களே!

உலகோர் உய்ய பகவத் கீதையை அருளியவனும், ஆபத்பாந்தவனும், அநாத ரக்ஷகனுமாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் ஜெயந்தி தினமான நிகழும் மங்களகரமான விரோதி வருஷம் ஆவணித் திங்கள் 26 ஆம் நாள் இன்று (11.09.2009) வெள்ளிக்கிழமை கிருஷ்ணபக்ஷ அட்டமி திதியும் ரோகிணி நக்ஷத்திரமும் கூடிய நன்நாளில் மாலை 04.30 மணி முதல் ஸ்ரீ வேணுகோபால சுவாமிக்கு அஷ்டோத்திர கலச (108) சங்காபிஷேகமும் தொடர்ந்து விசேட தீபாராதனையும், சகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெறும். நள்ளிரவு 12.00 மணிக்கு ஜனன பூஜை, தாலாட்டு என்பன இடம்பெற்று சுவாமி வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளுவார். அதன் பின் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி காயப் பிரசாதம் வழங்கப்படும்.

**உறியடி உற்சவம்**

ஆவணித் திங்கள் 27 ஆம் நாள் நளை [12.09.2009] சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வந்து உறியடி உற்சவம் நடைபெறும்.

அடியார்கள் மேற்படி உற்சவங்களில் கலந்துகொண்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானின் திருவருளினால் ஸ்ரீ லக்ஷ்மிவிலாஸ சம்பன்னராக வாழ்வீர்களாக.

"கிருஷ்ணார்ப்பணமஸ்து"

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம். ஆதீன மஹாசபை தொ.பே: 0212222476

(சி/560860)


## தொடரட்டும் கலைப்பணி




அளவெட்டி கணேஸ்வரத்தைச் சேர்ந்த

**நடராசா சிறீஸ்கந்தராசா (மில் சிறி)**

அவர்கள் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற கலை கலாசாரப் போட்டியில் பாடலாக்கத்தில் (தவிக்கும் நெஞ்சங்கள்) பங்குபற்றி பிரதேச, மாவட்ட மட்டங்களில் முதலாமிடத்தையும் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதில் மிக மகிழ்ச்சி அடைவதோடு அவரின் கலைப்பணி மேலும் சிறப்புறத் தொடர வாழ்த்துகின்றோம்.

**அளவையூர் நலன் விரும்பிகள்**

## சேவை நலன் பாராட்டு



**திரு. தாமோதரம்பிள்ளை வல்லிபுரம்**

(பிரதி அதிபர்) 11.09.2009

முப்பத்தொரு வருட கால நிறைவான ஆசிரிய சேவையில் எமது பாடசாலையில் எட்டு ஆண்டுகள் கணித பாட ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் சேவையாற்றி இன்று ஓய்வு பெற்று தனது அறுபதாவது அகவையில் காலடி பதிக்கும் இந்நாளில்அவர் மேன்மேலும் சீரும் சிறப்பும் பெற்று நல்ல உடல் நலத்துடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்

அல்வாய் கிழக்கு, அல்வாய்.

(சி/560857)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சித்தங்கேணி, செப்.11

விசர் நாய்க்கடி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று வெள் ளிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபையின் தலைமைக் காரியாலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (201-112)


## மருந்தாளர் தேவை

இல. 644, பருத்தித்துறை வீதி, நல்லூரில் இயங்கும் மெடி எயிட்ஸ் மருந்தகத்திற்கு ஒரு மருந்தாளர் தேவைப்படுகின்றார். ஓய்வுபெற்ற மருந்தாளர், பதிவுசெய்யப்பட்ட மருந்தாளர் அல்லது பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையினால் பயிற்றப்பட்ட மருந்தாளர் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும்.

தொ.பே: 021 222 6939 உரிமையாளர்.

(88748)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 21 ★ 10 ★ 1937



ஆண்டவன் அடியில் 23 ★ 08 ★ 2008

**திருமதி நவரட்ணம் சரோஜினிதேவி**

(செல்வம் மெக்கானிக்)

*ஈர விழிகளில் கண்ணீர் சுமந்து*
*ஆண்டொன்று ஆனதுவோ !*
*தாங்க முடியுமோ!*
*தலை விதி இது வென*
*ஏங்கிட வைத்தாயோ! - அம்மா*
*கலங்குகின்றோம்!*
*ஏனம்மா எம்மை இடைநடுவில்*
*தவிக்க விட்டீர்!*
*என்றும்உங்கள் நினைவுகளை*
*கனவுகளைச் சுமந்து*
*கண்ணீர்த் துளிகளைக்*
*காணிக்கையாக்குகின்றோம்!*
*ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!*

இணுவில் மேற்கு, இணுவில்.

N.Kuperan[மகன்]

என்றும் உங்கள் நினைவுடன்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(88758)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 08 ✻ 04 ✻ 1940



உதிர்வு 12 ✻ 08 ✻ 2009

அமரர்

**வைரமுத்து சிவசுப்பிரமணியம்**

(Rtd. P.H.I) டச்சு வீதி, சாவகச்சேரி.

திதி. ஆடிமாத தேய்பிறை சப்தமி

கடந்த 12.08.2009 அன்று எங்களை விட்டுப் பிரிந்து அமரத்துவம் எய்திய எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எங்கள் துய்ரத்தில் பங்குகொண்ட உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம், அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை சனிக்கிழமை (12.09.2009) பகல் 10.30 மணியளவில் பம்பலப்பிட்டி அரச தொடர்மாடி சனசமூக நிலைய மண்டபத்தில் (Bambalapitiya Government Flats, Community Centre, Hall) நடைபெற இருப்பதால் அத்தருணம் தங்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

011 - 2736194, 0777 667663

(சி/560630)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்



11.09.2009



## அழகிய தேரில் பெருமாள் ஆரோகணிக்கிறார்



தொல்பதியாம் பொன்னாலை என்னும் திருப்பதியிலே ஸ்ரீதேவி, பூமாதேவி சமேதரராய் விற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்கு இன்று (11.09.2009) வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றோம்.

ஆலய விழாக்களில் தேர்த் திருவிழா சிறப்புடையதாக விளங்குகிறது. தேரில் வடம்பிடித்தால் வானத்தில் இடம்பிடிக்கலாம் என்பது முதுமொழி. தேரில் இறைவன் எழுந்தருளி அருள் பொழிவது அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞான ஒளியை ஏற்றுவதாகும்.

அடியார்கள் அனைவரும் ஸ்ரீ வரதராஜப் பெருமாளைத் தரிசித்து துன்பங்கள் நீங்கி இன்பமாக வாழ எல்லாம் வல்ல பெருமாளைப் பிரார்த்திப்போமாக. அழகிய தேரில் பெருமாள் ஆரோகணித்து அடியவர்களுக்கு அருள்காட்சி வழங்க ஆசிகூறுகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசார்ய சுவாமிகள்,
நல்லை ஆதீனம்.

## ஆசியுரை



காத்தல் கடவுளாம் நாராயணன் இலங்காபுரியின் வடபால் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முதன்மை தலங்களில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானமும் ஒன்றாகும். மிகவும் பழமையும் புதுமையும் அமையப் பெற்ற இத்தலத்தில் ஆவணி ரோகினி அட்டமி நாளான கிருஸ்ண ஜெயந்தியை இரதோற்சவமாகக் கொண்டு பதினெட்டு நாள்கள் மகோற்சவம் நடைபெறுகின்றது. மகா பாரதப் போர் பதினெட்டு நாள்கள் நடைபெற்று அறம் வென்றதைக் கூறும் அந்தக் காப்பியத்தை அடியொற்றியே இந்தப் பதினெட்டு நாளாக உற்சவம் நிர்ணயிக்கப்பட்டதென ஒரு கருத்து உண்டு. தீயதை களைந்து நன்மையைப் பெருக்கிய கண்ண பரமாத்மாவின் பாதங்களை பணிபவர்கள் மிகப் பாக்கியம் பெற்றவர்களாவர். எல்லாம் வல்ல எம்பெருமானின் இரதோற்சவ நன்நாளில் தரிசனம் செய்பவர்களும் நாராயணனின் கழலை நினைந்து கொள்பவர்களும் எல்லா வகையான இன்பங்களும் பெற்று பெருவாழ்வு வாழ ஆசிகூறி அமைகின்றேன்.

'கோவிந்த நாம சங்கீர்த்தனம்'

விஸ்ணு ஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்.

## தலமும் இருப்பிடமும்

தட்சிண கைலாச மகா க்ஷேத்திரங்கள் இருக்கப் பெற்றதும் சுவர்க்கத்திலும் பார்க்க அழகுள்ளதுமாகிய இலங்கையின் வட பாகத்தில் வீணாகான புரமென்று சொல்லுகின்ற யாழ்ப்பாணத்தில் மேற்குத்திக்கில் நீர் நிறைந்த குளங்களும் வயல்களும் முன்னே இருக்கவும், உவர் நீர்க்கடலும் சமுத்திரமும் தெற்கு மேற்கு திசைகளில் பொருந்தவும் பெற்றதாய் இவற்றிற்கு நடுவண் சதுரங்கமென்னும் மணற் பூமியில் பொன்னாலயம் என்னும் திவ்யஸ்தலம் இருக்கின்றது. ஆலயத்திற்கு முன்னே குறுக்காகச் செல்லும் தெருக்கரை மார்க்கமாகப் பருத்தித்துறைக்குப் போகலாம். ஆலுயத்துக்கு முன் (கிழக்கு மேற்காகச் ) செல்லும் மண் தெரு, மூளாய் மார்க்கமாக யாழ்ப்பாணம் செல்லும் பிரசித்தமான தெருவைச் சந்திக்கின்றது.

### தலப்பெயர்கள்

இத்தலத்திற்கு சுவர்ணாலயபுரி, சதுரங்கம், பொன்னாலயம் என்ற பெயர்கள் கூறப்படுகின்றன.

*சுவர்ணாலயபுரி*

இந்திரன் வசிக்கப்பெற்றதனாலும் இந்திர விமானம் ஆதி கூர்மத்தோடு தோன்றியபடியாலும் இப்பெயர் பெற்றது.

*சதுரங்கம்*

ஆலய உற்பத்தி காலத்தில் கடல் அலையினால் ஒதுக்கப்பட்ட பெருமணலில் ஆமையானது விடப்பட்டுக் கல்லானவுடன் அவ்விடத்திலேயே ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அதனால் இப்பெயர் உண்டாயிற்று. அரங்கம் என்பது விட்டுணுவுக்குப் பிரீதியாக அமைந்த தலப் பெயர். பரதநாட்டிலும் ஸ்ரீரங்கம், ஆதிரங்கம் எனப் பல அரங்கங்கள் உள.

*பொன்னாலயம்*

முன்னொரு காலத்தில் விட்டுணு மூர்த்தியை மகாலக்குமி பூசித்த ஸ்தலம். பொன்னென்னும் பல பொருளொரு சொல் ஈண்டு இலக்குமியைக் குறித்து நின்றது. அன்றி பொன்னம்பலம் பொன்னரங்கம் என்பன போல இதுவும் ஒரு காலத்துப் பொன்னால் அமைந்த ஆலயமாய் இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுவர்.

### கோயிலமைப்பு

இவ்வாலயம் பொன்னாலை என்னும் கிராமத்தின் மேற்கே கிராமத்தைப் பார்ப்பது போல் கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் மிக அழகாக விளங்குகின்றது. இதற்கு இப்போது இரு பிரகாரங்களே உள. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்து ஏழு பிரகாரங்கள் இருந்தன. அவற்றில் ஏழாவது பிரகாரத்தின் முன்னுள்ள கணேசர் ஆலயம் இப்போதும் உள்ளது. இப்போது தோரோடும் வீதியில் அதாவது கோயிலுக்குப் போகின்ற முன்னமைப்பில் இவ்வாலயத்தோடு புராதனமாயமைந்தவரும் வரந் தருபவருமான நரசிங்க பைரவர் வீற்றிருந்தருளியுள்ளார். உட்பிரகாரத்தில் தெற்கே நாகதம்பிரான், வடமேற்கே சனீஸ்வரன் கோயிலும், வடக்கே தீர்த்தக் கிணறும் வன்னியும், அடுத்தாற் போல நவக்கிரக கோயிலும் வசந்த மண்டபமும், ஈசான திசையில் யாக மண்டபமும் இருக்கின்றன.

### தலப்பெருமை

செய்தற்கு அரிய பெரிய திருப்பணி குளக்கோட்டு மகாராசனால் செய்யப்பட்டது. அவனால் அக்காலத்தில் அமைக்கப்பட்ட ஏழு வீதிகளும் பின்னே ஒல்லாந்தரால் இடிக்கப்பட்டு சங்கானை முதலிய ஏழு இடங்களில் கிறிஸ்தவ ஆலயங்களாகக் கட்டப்பட்டன. இப்போதும் சீரியமுறையில் கோயில் அமைக்கப்பட்டிருக்கின்றது. முன்னே புலவர்களாலும் பக்தர்களாலும் பாடப் பெற்ற பதிகங்கள் அனேகம் இப்போது இல்லாமல்போயின. சிலவே உள. பறாளை விநாயகர் பள்ளு என்ற நூலில் இத் தலப்பெருமை சிறிது கூறப்பட்டுள்ளது.

### தேசமெங்கும் அமைதியினைத் திகழச் செய்யே

சீரார் மேவிச் திகழும் சீலரே
தீரடவரத் துயிலதனை நீத்து மண்ணில்
பேரான எழுவீதி பொலியு மிந்தப்
பொன்னாலைப் பதியுவந்து நின்றேயுந்தன்
நேரான் வற்புதங்கள் நிலத்திற் காட்டி
நிகரிலருள் பொழியவரு வரதராஜா
தேரேறி வருகின்ற தேவே கண்ணா
தேசமெங்கும் அமைதியினைத் திகழச் செய்யே

கண்ணனை வைப்போற் காசினியிற் காக்கும் தெய்வம்
காணமென் றுன்பாதம் கருதித் தொழுவார்
மண்ணதனில் பகைபகைத்து மாண்டும் வாழ்வை
மரநிழலிற் கழிப்பதுவும் முறையோ கண்ணா!
திண்ணமென உந்தனது திருவார் வீதி
தொடக்கிவைத்த பெருமானே முடித்தும் வைப்பாய்
வண்ணமிகு தேரேறி வருந்து வோரை
வதைத்தெமக்கு அமைதியுறு வாழ்வைத் தாராய்.

சு.கு.சுந்தரமூர்த்திசர்மா அர்ச்சகர், யாழ்ப்பாணம்.

### எம் பவவினையை வேரறுப்பாய் தேரேறிவந்தே!

பொன்னாலை நாதாவுன் புனித தலம் வருவோர்
பொன்னுலகு காணுமொரு புத்துணர்வு பெறுவர்
எந்நாளு முனைமறவா இசைவாண ரிங்கே
இறைவா உன் அருள் வேண்டி இசைமாரி பொழிவர்
அன்பான அடியவர்கள் அரங்கநாதன் கோயில்
அணியணியாய் வலம் வந்து அடிதொழுது பணிவர்
பன்னாளும் பாதமலர் சூடுகின்ற அன்பர்
பவவினையை வேரறுப்பாய் தேரேறி வந்தே

சி.வெற்றிவேலு, வட்டுக்கோட்டை.

ஒளிர் கதிர்
அழகுமாடம்
சிம்காட், றீலோட் செய்யப்படும்
பிரதான வீதி,
வட்டுக்கோட்டை

Micro Tower
Computer Printing
and
Music Centre
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.

சுயானன்
தொலைத்தொடர்பகம்
புதினப் பத்திரிகை முகவர்
காரைநகர் வீதி, மூளாய்

பிள்ளையார்
ஸ்ரோர்ஸ்
ஓடக்கரை வீதி, சங்கானை.

S.R.P.
அன் சன்ஸ்
உள்ளூர்
விளை பொருள்கள்
விற்பனை ஏற்றுமதி
ஏக விநியோகஸ்தர்
இல.18, 19, புதிய சந்தை,
புத்தளம்.
சூராவத்தை, சுன்னாகம்.

நிறைவான பொருள்களை
நியாயமான விலையில்
பெறுவதற்கு
சச்சியா இரும்பகம்
தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை.

கரன்
ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.

ஸ்ரீ முருகன்
களஞ்சியம்
புதினப் பத்திரிகை முகவர்
மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

நல்லதம்பி
ஸ்ரோர்ஸ்
மூளாய் றோட், மூளாய்.

தில்லையம்பலம்
அன் சன்ஸ்
உழவு இயந்திர
உதிரிப்பாகங்கள் ஏக
விநியோகஸ்தர்
நவாலி அரசடிச் சந்தி,
மானிப்பாய்.

அனைத்துப் புடைவை
வகைகளின் மொத்த,
சில்லறை வியாபாரிகள்
சீமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

கணேசா
ஹாட்வெயர் ஸ்ரோஸ்
மின்சார உபகரணங்கள்
ஏக விநியோகஸ்தர்
காரைநகர் றோட்,
மூளாய்.

திவ்யானி
ரவல்ஸ்
திருமண வைபவங்கள்,
விழா நிகழ்வுகளுக்கு குறித்த
நேரத்துக்கு ஒழுங்குசெய்து
தரப்படும்.
காரைநகர் றோட், மூளாய்.

இளவரசி
சேலைச் சோலை
பட்டுப் புடைவைகளின்
சாம்ராஜ்யம்
57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

தரமான உடுபுடைவைகளை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
G.S.லிங்கநாதன்
அன்கோ
97, பெரியகடை, யாழ்ப்பாணம்.
13,14 பெரிய கடை, யாழ்ப்பாணம்.

சிறி நதியா
நகை மாளிகை அன்
டிஜிற்றல் கலர் லாப்
இல.01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 2709
இல.56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 6744
இல.108அ, லக்சன் பிளாசா
கட்டடம் நாவலர் வீதி
தொ.பே: 021 222 8412

கூல் பானங்கள்,
கேக் வகைகள், மற்றும்
சிற்றுண்டி வகைகள்
அனைத்தையும் பெற்றிட
லிங்கம்
கிறீம் ஹவுஸ்
யாழ்ப்பாணம்.

சங்கானை
ப.நோ.கூ.சங்கம்
(வ/து)
சகலவிதமான
பொருள்களும் நியாய
விலைக்குக்
கூட்டுறவு நகர் மூலம்
பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, சங்கானை.

மோட்டார்சைக்கிள்,
துவிச்சக்கரவண்டி,
ஆட்டோ
உதிரிப்பாகங்களை
எம்மிடம் பெற்றுக்கொள்ள
பெசன்
மோட்டோர்ஸ்
யாழ்.வீதி, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ.1000, ரூ.2000 கள்ள நோட்டுகளுடன் மூன்று பெண்கள் அநுராதபுரத்தில் கைது!

கொழும்பு, செப். 11

அநுராதபுரம் கெக்கிராவப் பகுதியில் ஐந்து லட்சத்து 10 ஆயிரம் ரூபாவுக்கான கள்ள நோட்டுக்களை வைத்திருந்த மூன்று பெண்களைப் பொலிஸார் செவ்வாய்க்கிழமையன்று கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களின் வீட்டிலிருந்து இரண்டாயிரம் ரூபாவுக்குரிய 227 கள்ள நோட்டுக்களும், ஆயிரம் ரூபாவுக்குரிய 56 கள்ள நோட்டுகளும், அவற்றைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் மெதிவக்க தெரிவித்தார். கெக்கிராவ நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள வியாபார நிலையம் ஒன்றில் இரண்டாயிரம் ரூபா கள்ள நோட்டுக்களை மாற்ற முற்பட்ட வேளையிலேயே பிரதான சந்தேக நபரான பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே பிரதான சந்தேக நபரின் சகோதரி மற்றும் அவருடைய மகள் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## மண்ணின் மைந்தனை வாழ்த்துகின்றோம்



எமது தாயகத்தின் மைந்தனும் அதன் வ்ளர்ச்சிக்காகச் சிறந்த தொண்டாற்றியவரும் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சின் யாழ்.மாவட்ட மக்கள் தொடர்பாளரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான

**சில்வஸ்ரர் அலன்ரின்**

(உதயன் தோழர்)

அவர்கள் கடந்த 03.09.2009 வியாழக்கிழமை அகில இலங்கை சமாதான நீதிவானாக (J.P.) பதவியேற்றுக்கொண்டதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைவதுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வ்ழிகாட்டலில் தொடர்ந்து மக்கள் பணியுடன் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
நெடுந்தீவுப்பிரிவு.

நெடுந்தீவு. (சி/560855)

## மரண அறிவித்தல்



### அன்ரனி கந்தையா யோகராஜா

யாழ்.மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்தவருமாகிய அன்ரனி கந்தையா யோகராஜா 09.09.2009 புதன்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் இராசமலரின் அன்புக் கணவரும் அன்ரனி கந்தையா- திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம்- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் ரொனிக்கல் (பிரான்ஸ்), யூலி (டென்மார்க்), மீரா (பிரான்ஸ்), கட்சன் (பிரான்ஸ்) சுவைனி ஆகியோரின் அன்புத் தந்தையும் ராணி (பிரான்ஸ்), வவா, அருட்செல்வரட்ணம் (இரசாயனத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்), காலஞ்சென்ற ஜெயமலர் மற்றும் ரதி, சாள்ஸ் (கனடா), யோன்சன் (கொலன்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவர். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும்.

15/4, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0602007164, 0779596675.

தகவல்:
அ.அருட்செல்வரட்ணம் (தாசன்).

(88745)

## முதியோர் சங்கக் கலந்துரையாடல்

சித்தங்கேணி, செப்.11

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முதியோர் சங்கங்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில், பிரதேச செயலர் தலைமையில்நடைபெறவுள்ளது.

ஏற்கனவே முதியோர் சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டபடி முதியோருக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோரின் பெயர் விவரம் மற்றும் கலைநிகழ்வுகள், கண்காட்சியில் வைக்கப்படும். பொருள்களின் விவரம் ஆகிய விவரங்களைக் கொண்டு வருமாறு சண்டிலிப்பாய்ப் பிரதேச சமூகசேவை உத்தியோகத்தர் ஏ.வி.அருந்தவராஜா கேட்டுள்ளார். (201-112)


## தேவை

கணனி அறிவுடைய பணியாளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். முடிவுத் திகதி: 13.09.2009. தொடர்பு: பிரகாஷ் எலக்ரோனிக்ஸ், பஸ் நிலையம், பருத்தித்துறை. (88697)

## வேலையாள் தேவை

பேக்கரி வேலையில் அனுபவமுள்ளவர்கள் (பாஸ்) தேவை.
தொடர்பு: பொற்பதி வீதி, கொக்குவில்.
தொ.பே.இல.: 0777294249. (88747)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 11 1954



மறைவு 03 10 2007

### அமரர் திரு.க இராசரத்தினம்

தாவளை இயற்றாலை கொடிகாமம்

திதி : 11.09.2009
(பூர்வ பக்க ஸப்தமி)

பாசமுடன் வாழ்ந்தீர் அப்பா - எங்களை
பரிதவிக்க விட்டுச் சென்றீர்
நேசமுடன் வாழ்வோம் என்றிருக்க - இடையில்
நிலை தடு மாறினதே எம் வாழ்வில்
விதி செய்த சதியாலே வீணாகிப்
போனதுவே - உம்வாழ்வு
துயரம் தாங்காது துவண்டே வாழுகிறோம்
ஆசையாய் பெற்றெடுத்த உங்கள் பாலகரின்
அகமகிழ்வைக் கண்டிட இப்பூவுலகில்
நீங்களில்லை
இறைஞ்சியே நிற்கின்றோம் அப்பா
இறைவன் திருவடியில் ஆத்மா
அமைதியாக சாந்தி பெற!
ஓம்சக்தி! ஓம்சக்தி! ஓம்சக்தி!

பாசமுடன் மனைவி, மகன்மார், மருமகள்
கொழும்பு.


இன்னும் 2 நாட்களே உள்ளன. விரையுங்கள் !

Mega

கொம்ப்யூட்டர் கல்விக்கான புலமைப்பரிசில் பரீட்சை
13.09.2009 (ஞாயிறு)
இலவச அனுமதிகளை
ASIAN COMPUTERS
யாழ்நகர், நெல்லியடி பயிற்சி நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.


## தூய ஆரோக்கிய அன்னையின் பெருவிழா - 2009


அஞ்சனந்தாழ்வு, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

நாளை (12.09.2009) சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருப்பலியும், தொடர்ந்து நற்கருணை வழிபாடும், பவனியும், நற்கருணை நாதரின் ஆசீரும் வழங்கப்படும். 13.09.2009 ஞாயிற்றுக்கிழமை பெருவிழாத் திருப்பலி காலை 7 மணிக்கு யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் செளந்தர நாயகம் ஆண்டகை அவர்களின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும்.
திருப்பலி நிறைவில் அன்னையின் திருச்சொரூபப் பவனியும் அன்னையின் ஆசீரும் இடம்பெறும்.

(88746)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 31 ★ 03 ★ 1950



மறைவு 22 ★ 08 ★ 2008

### அமரர் செல்லத்துரை சண்முகரத்தினம்

ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலவில்லை
நீங்கள் எம்மைப் பிரிந்து சென்றாலும்
நாம் உங்கள் மீது கொண்ட பாசமும்
நேசமும் எம்மை விட்டுப் பிரியவில்லை
உங்களைப் போல் ஒருவரை நாம்
எப்போ காண்போம் இப் பூமியில்.....


இல.33, டச்சு வீதி,
உடுவில்.

உம் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

(88687)

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலி

துளிராய் 24 ★ 07 ★ 1950



விதையாய் 12 ★ 08 ★ 2009

### அமரர் செல்வநாயகம் அன்றூ அமிர்தநாயகம்

(யோகநாயகம்)

இறைவேண்டல்

வாழ்வெனும் கொடை அளித்து இறைவன் தன் இன்ப சந்நிதானம் அழைத்துக் கொண்ட, என்றும் எம் நினைவிலிருந்து நீங்காதிருக்கும் எமது அன்புச் சகோதரரே! பல்வேறு சவால்கள், துன்பங்கள் மத்தியிலும் புன்சிருப்புடன் வாழ்ந்தவரே, உமது பிரிவை வார்த்தைகளால் வர்ணிக்க முடியவில்லை. நீர் எம்மைவிட்டு உடல் ரீதியாகப் பிரிந்தாலும் அனுதினமும் உம் நினைவில் வாழுகின்றோம். நீர் விண்ணகத்தில் நித்தியமும் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் தோழமையில் வாழ இறைவனைத் தினமும் மன்றாடுகின்றோம்.

இவரது ஆன்ம சாந்திக்காக இன்று (11.09.2009) வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்குபற்றி இவருக்காக செபிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உன் நினைவில் வாழும்:
அம்மா, மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள், பேரப்பிள்ளைகள், திரு.திருமதி மதுரநாயகம், நிரோஷன், சுஜந்தா, ஜெகான்.

53/1,
மவுண்ட்காமல் வீதி,
யாழ்ப்பாணம். (88623)

## ஓயாத துயரின் நினைவாகும் ஈராண்டு





**அமரர் சுப்பிரமணியம் கௌசிகன்** — **அமரர் சுப்பிரமணியம் இதயராஜ்**

27.08.1979 → பிறப்பு ← 09.11.1981
15.12.2007 → பறிப்பு ← 03.09.2007

காலத்தின் வேகத்தில் கரைந்துபோன நாள்கள்
ஒன்று கூடி ஆண்டுகள் இரண்டு ஆனது
ஞாலத்தில் பாசத் திருவுருவாய் வந்த
நீங்கள் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டு
காலதேவன் காலடி சென்றமை இன்றும்
நெஞ்சில் ஆறாத காயங்களாய் இருக்கின்றன
நாளும் உள்ளத்தில் உங்கள் நினைவுகளே
கனவுகளாய் இருப்பதை அறிவீரோ நீங்கள்!

68/2, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(88695) அம்மா, அப்பா, சகோதர உறவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர்

# தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 11.09.2009





## நாகேஸ்வரம் தல வரலாறு



ஸ்ரீ நாகவரத நாராயணர் வீற்றிருக்கும் நாகேஸ்வரம் முன்பு பற்றைக்காடாக இருந்தது. இக்குறுச்சி தம்பளாவத்தை என அழைக்கப்பட்டது. இப்பகுதிக்கூடாக மக்கள் போக்குவரத்துச் செய்யும் சிறு சிறு கால்நடை வழிகள் இருந்தன. முற்காலத் தில் தெற்கே உள்ள கிராமங்கள் வடக்கே இருக்கும் கீரிமலை, மாவிட்டபுரம் முதலிய தலங்களுக்கு அந்த கால்நடை பாதை ஊடாகவே செல்வர். கீரிமலை ஆடியமாவாசை தீர்த்தம் ஆடுவதற்கு இரவிரவாக நடந்து செல்வர். ஒருநாள் இவ்வாறு சென்றவர்களின் ஒருவரின் ஒன்பது வயதுச் சிறுவன் வழி தவறிவிட்டான். தந்தையும் மகன் வருகின்றான் என்று மற்றவர்களுடன் சென்றுகொண்டிருந்தார். சிறிது நேரத்தில் மகன் பிரிந்துவிட்டான் எனத் தெரிந்து கூட்டத்தில் தேடினார்; பலனில்லை. அழுது கொண்டு தீர்த்தமாடப் போகாது நின்றார். உடன் வந்தவர்களும் தேடினார்கள்.

சிறுவன் பற்றைக்குள் இருளில் அப்பா.... அப்பா... என்று அழுது திரிந்தான். களைத்து ஒரு மரத்தடியில் இருந்துவிட்டான். வாகை, நுணா, நாவல் மூன்று விரிட்சமும் சேர்ந்த இடத்தில் ஒரு பெரியவர் வந்து "மகனே அழாதே உன் அப்பாவிடம் கூட்டிச் செல்லுகின்றேன்." என்று கூறி கொஞ்சம் அவலை உண்ணக் கொடுத்து தண்ணீரும் பருக வைத்தார். மெதுவாகக் கூட்டிச் சென்று தந்தையிடம் ஒப்படைத்து மறைந்து விட்டார். எல்லோரும் அதிசயப்பட்டனர். சிறுவனும் தந்தையும் தீர்த்தமாடி திரும்புகையில் வழி தவறிய இடம், பெரியவர் அவல் கொடுத்த இடம் ஆகியவற்றை தந்தைக்கு காட்டிக் கொண்டு வந்தான். என்ன அற்புதம். சிறுவன் வழிதவறி இருந்த இடத்தில் பெரிய பாம்புப் புற்றுகள் காணப்பட்டன. அதேவேளை இரண்டு நாகங்கள் காட்சி காட்டி அமைந்தன. அனைவரும் இது நாகதம்பிரானின் இடம் என்று வழிபட்டுச் சென்றனர்.

காலகதியில் அவ்விடம் சிறு ஆலயமாக உருவானது. அதனருகே கேணியொன்றும் அமைக்கப்பட்டது. "கேணியடி நாகதம்பிரான்" என்று வழங்கப்பட்டது.

ஆவணி ரோகிணியில் விஷேட பொங்கல் பூசை செய்து வந்தனர். பெரிய பலகார மடைகள் வைத்து பஞ்சாராத்தி காட்டும் நேரம் மடைகளுக்கு மத்தியில் இரண்டு நாகங்கள் காட்சி காட்டி மறைவது வழக்கம்.

பிற்காலத்தில் அவ்விடத்தில் பொங்கல் காலங்களில் பந்தல் இட்டு பூசை செய்வார்கள். ஒரு வைரவ சூலம், ஒரு செப்பினால் செய்த பாம்பின் உருவம், ஒரு முக்கோணக் கல் இவை நிலத்திலேயே இருந்தன. மக்கள் வந்து வழிபட்டுப் போவார். இரவு வேளைகளில் பெரிய தீச்சுவாலை தெரியும். இதனால் சிலர் கேணியடி முனி என்றும், கேணியடி சோதி வைரவர் என்றும் நாராயணராகிய நாகதம்பிரான் என்றும் அழைத்து வந்தனர். கண்ணன் அவதாரம் செய்த தினமாகிய ஆவணி ரோகிணி கிருஷ்ணஜெயந்தியில் பொங்கல் செய்து வந்தமையால் திருவருள் உத்தரவுப் படி இத்தலத்தின் நாமம் நாகேஸ்வரம் என அழைக்கப்படுவது நிச்சயமாயிற்று.

(அருட்கவி வீநாசித்தம்பி புலவரின் தல வரலாறு நூலில் இருந்து)

## ஆலய பிரதம குருவின் ஆசியுரை



மாதவ மணியே நாராயணா!
மாடுகள் மேய்த்திடும் நாராயணா!
கீதையை உரைத்தாய் நாராயணா!
கேடுகள் அழித்தாய் நாராயணா!

இவ்விதம் பாடிப்போந்த அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா அடி பரவிய இவ்வாலயத்தின் பிரதம குருவாகப் பணியாற்ற அடியேன் பேறு பெற்றுள்ளேன். அன்புக் கரம் நீட்டி அடியார் துயர் நீக்கி அருள் பொழியும் நாகவரத நாராயணப் பெருமான் இன்று பூமியைத் தேராகவும், சூரிய, சந்திரர்களைச் சக்கரமாகவும், விண்மீன்களை விதானமாகவும், மேரு மலையை வில்லாகவும், வாசுகியை நாணாகவும், நால் வேதங்களைக் குதிரைகளாகவும், பரதேவனை சாரதியாகவும் கொண்டு சித்திரத் தேரேறி அடியார் துயர் நீக்க வருகின்றார். இத் தருணம் யாவருக்கும் சாந்தியும் சமாதானமும் நல்கி அருள் வழங்கி புண்ணியப் பேறடைய அவன் அருள் வேண்டி நிற்போமாக.

'ஓம் நமோ நாராயணாய நம'

சிவாகம ஞானபானு பரம சண்முகசுந்தரக் குருக்கள்,
ஆலய பிரதம குரு.

## சித்திரத்தேர் மீது சிங்காரக் காட்சி தாருமையா!

நாகவரத நாராயணனே நமக்கருள் புரிய வேண்டும்
நாடியுனைத் தேடி நாம் நம்பியே வந்தோமையா!
மோகனப் புன்னகை தவழத் தேரிலே எழுந்தருளி
அக்கிரமத்தையழித்து அடியவரைக் காத்திட வேண்டும்

சோகவாழ்க்கை நாம் வாழ்ந்தது போதுமே கிருஸ்ணா!
இனியாவது நிம்மதி தரவேண்டும் கண்ணா!
நாகமது படமெடுக்க ஸ்ரீதேவி பூமிதேவியுடனே
சித்திரத் தேர் மீது சிங்காரக் காட்சி தாருமையா!

-கண்ணன் கழல் பணிவோன்-

## ஆசியுரை



அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணப் பெருமானுக்கு இன்று தேர்த் திருவிழா நடைபெறுவது எல்லோருக்கும் பேரானந்தம் அளிப்பதாகும்.

வழி தவறிய சிறுவனுக்குப் பசி போக்க அவலும் தண்ணீரும் கொடுத்துத் தகப்பனிடம் சேர்ப்பித்த ஸ்ரீ நாகவரத நாராயணப்பெருமான்- அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் அடி பரவிய ஸ்ரீ நாகவரத நாராயணப்பெருமான் - தேரேறி வந்து தமிழ் மக்களுக்கு சாந்தியும் சமாதானமும் நிலைத்திடச் செய்யவேண்டுமெனப் பிரார்த்திப் போமாக.

தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற எம்பெருமான் அருள் கிடைக்க வேண்டுமென ஆசி கூறுகின்றேன்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசார்ய சுவாமிகள்,
நல்லை ஆதீனம்.

## அநுதினமும் காவல் தந்த பெருமாளே

வளமதிக மாபி லங்கு அளவைதனை யேயுகந்து
வரமருளு நாராயணனென் - றெழுநாக
வரதனெனவே யமர்ந்து வரமளி யேயுரந்து
வரையிலகு ளேவ வழங்கி- வருகோனே!

உளகவலை யானுந் நொந்து உடலினுள நோயில் வெந்து
அபயமென காலி தென்று - வருவோர்கள்
உலைவு அற நீறுந் தந்து நரமணியு நாலுந்தந்து
பிணியகல வேமருந்து - முரைகோனே

உளமதனை யேயுருக்கி குளமெனக் கண்ணீர் பெருக்கி
உனதடிய தேது திக்கு -மவர் வாழ்வு
உலகதனி லேயுயர்ந்து உனதுயரு மேயழிந்து
உவமையில வாழ்வை யள்ளி - அருள்வாயே

அளவிலருள் வாக்கும் சொல்ல அடிபணிவி நாசித்தம்பிக்
கக வொளியி லேஒ ளிர்ந்து - உறைவோனே
அருட்கவியி லேம கிழ்ந்து அளவிலருள் வாரி நின்று
அநுதினமும் காவல் தந்த - பெருமானே

இராசையா குகதாசன்


**ஆசைப்பிள்ளை அன் சன்ஸ் நகைமாடம்**
22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.
இல.10, பஸ் நிலையம் முன்பாக, சங்கானை.

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**
பட்டுப் புடைவைகளின் சாம்ராஜ்யம்
41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ காளி கிறீம் கவுஸ்**
கட்டுவன் றோட், மல்லாகம்.

**சிவதயா றேடர்ஸ், கிறீம்ஹவுஸ்**
மல்லாகம் வீதி, மாகியப்பிட்டி.

**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் வாணிபம்
மல்லாகம் வீதி, மாகியப்பிட்டி.

ஸ்ரீ நாகவரதநாராயணரே போற்றி
**எரிக்கணேஸ்**
பல் மூக்குக் கண்ணாடியகம்
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

**ரூபன் பல்பொருள் வாணிபம்**
**K.R நிருமெடிக்கல் கிளினிக்**
தினமும் M.B.B.S. டாக்டரினால் 4.30-7.00 pm வரை நோயாளரை பார்வையிடுவார்கள்.
அளவெட்டி

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
**சீமாட்டி புடைவைக் கடல்**
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

எம்பெருமானே போற்றி! இலட்சுமி நாதா போற்றி!! போற்றி!!!
**லிங்கம் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**மெடிலான்ட்**
ஆங்கில மருந்துகள் விற்பனையில் பலவருடகால முன்னோடி நிறுவனம்.
ஆலடிச் சந்தி, மானிப்பாய்.
பிரதான வீதி, சங்கானை.

**க.கு.கந்தையாபிள்ளை அன்சன்ஸ்**
513(124), ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

**க.செ.கைலாசம்பிள்ளை அன்சன்ஸ்**
76, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்களுக்கு நாடவேண்டிய ஒரே இடம்
**சிறிமாதவன்**
97,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நாகத்திலாடிடும் நந்தா கோவிந்தா!
**கரிகணன் பிறின்டேர்ஸ்**
424, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**சாரங்கா நகைமாடம்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**சாரங்கா ஜுவல்லறி**
செட்டித்தெரு, கொழும்பு.

**சிறி நதியா**
நகை மாளிகை அன் டிஜிற்றல் கலர் லாப்
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2709
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 6744
இல.108A, லக்சன் பிளாசா கட்டடம் நாவலர் வீதி, யாழ்.
தொ.பே: 021 222 8412

தரமான உடுபுடைவைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**G.S.லிங்கநாதன் அன்கோ**
47, பெரியகடை, யாழ்ப்பாணம்.
13,14 பெரிய கடை, யாழ்ப்பாணம்.

**றமணன் V.D.O சென்ரர்**
V.D.O எடிற்றிங், வெளிப்புற படப்பிடிப்புகள்.
**SIT Computer Center**
புதிய பிரிவு ஆரம்பம்;12.09.2009
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

ஐஸ் கிறீம் வகைகள், சிற்றுண்டி வகைகள் என்பவற்றை தரமாகப் பெற்றிட
**அம்பிகா கிறீம் கவுஸ்**
மலைவேம்படி, அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

**கயிலா நகைத் தொழிலகம்**
22 கரட் தங்க நகைகளை குறித்த தவணையில் பெற்றிட
சங்கானை வீதி, மாகியப்பிட்டி, அளவெட்டி.

**விமல் ஸ்ருடியோ போட்டோ அன் வீடியோ பான்சி ஹவுஸ்**
அல்பம் வடிவமைப்பாளர்கள்
அளவெட்டி தெற்கு,
தொ.பே:0776305183, 0602218042.

**New Micro Computer Systems**
Computer Education
No:30,Main Street, Chankanai, Jaffna.
T.P: 0602210727

Anna OHO Jeevakaram
உடனடிச் சத்துணவு
**அண்ணா தொழிலகம்**
இணுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர் திஸநாயகத்தை உடனடியாக விடுவித்து இன சமரசத்துக்கான வாய்ப்பை உறுதிப்படுத்துங்கள்!

## ஆசிரிய தலையங்கம் மூலம் 'இந்து' நாளிதழ் ஜனாதிபதிக்கு ஆலோசனை

சென்னை, செப். 11

இலங்கையில் ஊடகவியலாளர் ஜே. எஸ். திஸநாயகத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் இருபது வருட கடூழியச் சிறைத் தண்டனைத் தீர்ப்பை உடனடியாக ரத்துச் செய்ய இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்தியாவின் பிரபல ஆங்கில நாளேடுகளில் ஒன்றான 'இந்து', 'ஊடக சுதந்திரத்துக்கு விழுந்த அடி' என்ற தலையங்கத்தில் நேற்று முன்தினம் ஆசிரிய தலையங்கம் தீட்டியுள்ளது.

ஊடகவியலாளர் திஸநாயகத்தின் விடுதலைக்கான உத்தரவைப் பிறப்பிப்பதன் மூலம் இலங்கையில் இனங்களுக்கு இடையில் சமரச இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் இலங்கையில் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசுக்கு அருமையான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும் 'இந்து' சுட்டிக்காட்டியுள்ளது.

'இந்து'வின் ஆசிரிய தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் சுருக்கம் வருமாறு:-

இலங்கையின் ஊடகத்துறையைச் சேர்ந்த ஜாம்பவான்களில் திஸநாயகமும் ஒருவர். கொழும்பு மேல்நீதிமன்றம், ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு 20 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து கடந்த 31 ஆம் திகதி தீர்ப்பளித்தது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அவர் தண்டிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், சர்வதேச சமூகம் திஸநாயகத்துக்கு வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பின் பின்னணியில் இலங்கையில் சுதந்திரங்கள் உள்ளனவா என்று கேள்வி எழுப்பும் நிலை உள்ளது. இலங்கைப் படையினரை விமர்சித்து, 'நோர்த் - ஈஸ்ட்' என்கிற மாதாந்த சஞ்சிகையில் கட்டுரை எழுதினார் என்ற குற்றச்சாட்டின்பேரில் ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் கடூழியச் சிறைத்தண்டனை மிகவும் கடுமையானதாகும். திஸநாயகம் ஒரு தமிழர். அவர் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவு பொலிஸாரால் கடந்த வருடம் மார்ச் மாதம் கைது செய்யப்பட்டிருந்தார். ஆனால், 2008ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வரைக்கும் அவர் எந்த நீதிமன்றத்திலும் ஆஜராக்கப்படவில்லை. அதுவரைக்கும் அவருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவும் இல்லை.

திஸநாயகத்தால் எழுதப்பட்ட கட்டுரை இனரீதியான அல்லது சமூக ரீதியான அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தது என்றும் -

திஸநாயகம் பயங்கரவாதத்தை வளர்த்தெடுப்பதற்காக குறித்த சஞ்சிகை மூலமாக நிதி திரட்டியிருந்தார் என்றும் -

மேல்நீதிமன்றம் அதன் தீர்ப்பில் தெரிவித்திருந்தது. ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு பேரதிர்ச்சியைத் தந்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் 1979 ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் முதலாவது ஊடகவியலாளர் திஸநாயகம் ஆவார்.

விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவம் கடந்த மே மாதம் தோற்கடித்தது. இந்த நிலையில் இன ஐக்கியத்தையும் சமூக நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டிய நேரத்தில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமையே பேரதிர்ச்சிக்கான காரணமாகும்.

திஸநாயகம் மீதான தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்பாகவே திஸநாயகம் சம்பந்தப்பட்ட குறித்த வழக்குத் தொடர்பாக சர்வதேச ஊடகங்கள் தலைப்புச் செய்திகளை எழுதி உள்ளன. கடந்த மே 3 ஆம் திகதி சர்வதேச ஊடகவியலாளர் தினம் இடம்பெற்றது. அத்தினத்தை முன்னிட்டுத் தாம் ஆற்றிய உரையில், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உலகின் பல நாடுகளிலும் ஊடகச் சுதந்திரம் இல்லை என்பதை சுட்டிக்காட்டியபோது இலங்கை ஊடகவியலாளர் திஸநாயகம் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு என்கிற சர்வதேச ஊடகவியலாளர்கள் அமைப்பு இவ்விடயம் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கையுடன் பேசவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. இந்த எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்புக்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு ஆலோசனைகள் கூறுவதற்கான தகுதிப்பாடு உண்டு.

ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு எதிராக இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட வழக்கு நடவடிக்கை, அவருக்கு வழங்கப்பட்ட சிறைத்தண்டனை, அவருக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பு ஆகியன பயங்கரவாதத்துக்கு எதிரான அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் அரசைக் கேள்வி கேட்க விரும்பும் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்குப் பாரிய அச்சுறுத்தலாக மாறி உள்ளன. புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்த பெருமையைப் பெற்றிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனநாயகத்துக்கான குரல்களைக் கவனமாக செவிமடுக்க வேண்டும். அத்துடன் அவர் ஊடகவியலாளர் திஸநாயகம் விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு அவரை விடுதலை செய்வதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை பல பிரச்சினைகளை எதிர்நோக்கிக்கொண்டிருந்த கால கட்டத்தில் கூட - 2002 ஆம் ஆண்டில் - இலங்கை நாடாளுமன்றம் குற்றவியல் அவதூறு சம்பந்தப்பட்ட சட்டங்களைச் செல்லுபடியற்றதாக்கியிருந்தது.

போருக்குப் பிந்திய தற்போதைய கால கட்டத்தில் அரசு 'பழையனவற்றை மறப் போம்; சிறந்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவோம்!' என்பதைத் தனது தாரக மந்திரமாக அறிவித்துள்ளது. இந்நிலையில் ஊடகவியலாளர் திஸநாயகத்தின் விடுதலைக்கான உத்தரவைப் பிறப்பிப்பதன் மூலம் இலங்கையில் இனங்களுக்கிடையில் சமரச இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் இலங்கையில் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கை அரசுக்கு அருமையான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-சி)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு.கந்தையா சந்திரசேகரன்
(அதிபர் சேவை தரம்-I)
யா/பண்ணாகம்
மெய்கண்டான் மகாவித்தியாலய முதல்வர் திரு.க.சந்திரசேகரன் அவர்கள் அதிபர் சேவை தரம்-I இற்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகளைப் பெற அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம் (சி/560859)

யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய சமூகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் பொது முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் **திருமதி ஜெயந்தி ஜெகசீலன்** அவர்கள் பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் I பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இவர் ஒருவர்தான் யாழ். மாவட்டத்தில் சித்தியடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் மேன்மேலும் பல உயர்வுகள் பெற்று சீருடனும் சிறப்புடனும் வாழவாழ்த்துகின்றேன்.

சு. செல்வராசா
ஒய்வுபெற்ற கிராம அலுவலர்.

கைதடி மேற்கு. (88754)

## கூறுவிலை கோரல்

**எமது தேவைக்கு பின்வரும் காகிதாதி தேவைப்படுகின்றது.**

60 கிராம் போஸ்ரர் பேப்பர் (வெள்ளை) 65 றீம்

மேற்படி கூறுவிலையை வழங்குவதற்கான இறுதித் திகதி 24.09.2009 ஆகும். விண்ணப்பம் எதிர்வரும் 24.09.2009 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக குறிப்பிட்ட வகை பேப்பர் மாதிரியுடன் அனுப்பி வைத்தல் வேண்டும். இவ் விண்ணப்பங்கள் அன்றைய தினமே திறக்கப்பட்டு ஆராயப்படும் அத்தருணம் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமளிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் தமது கூறு விலையை மூடிய கடிதவுறையில் அதன் இடது பக்க மேல் மூலையில் ''கூறுவிலை'' எனக் குறிப்பிட்டு பொது முகாமையாளர் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். இல. 52, சோமசுந்தரம் லேன், கண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 24.09.2009 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

**பொது முகாமையாளர்.**
வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.
இல. 52, சோமசுந்தரம் லேன், கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212225072 (சி/560920)


## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம்,செப்.11

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஆன்மீக இதழான 'ஞானச்சுடர்' மலரின் ஆவணிமாத மலர் வெளிவந்துள்ளது.

இவ் ஆன்மீக இதழ் கு.சிவபாலராஜாவின் ''தொண்டைமானாறு தொடக்கம் மாணிக்ககங்கை வரை'' எனும் வரலாற்றுக் கட்டுரை, மூ.சிவலிங்கத்தின் ''முத்திக்கு வித்தாகும் பக்தி நெறி'' எனும் கட்டுரை, செல்வி செ.ஜடாவின் ''மங்கலப் பொருள்களின் வரிசையில் விபூதியின் மகிமை'' ஆகிய கட்டுரைகளை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. (201)

## உரிய ஆவணங்களின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,செப்.11

உரிய ஆவணங்களின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 8 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் நடத்திய திடீர்ப் பரிசோதனையின் போது சாரதிய அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வரி போன்ற ஆவணங்களின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கினை விசாரித்த நீதிவான் மூன்று குற்றங்களுக்காகவும் 8 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 8 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(203-207)

## விவசாயக் குழுக் கூட்டமும் ஒருங்கிணைப்புக் கூட்டமும்

யாழ்ப்பாணம்,செப்.11

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் விவசாயக் குழுக் கூட்டமும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் எதிர்வரும் 17 ஆம் திகதி பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

விவசாயக் குழுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முற்பகல் 11 மணிக்கும் நடைபெறும். (203-100)


## தவறிவிட்டது

தில்லைவனராஜா பிரியா (877741311V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை 03.09.2009 அன்று சாவகச்சேரி நகர [illegible] 0772298921, [illegible] (88759)

## பாற்பொருள்களின் விலை விவரம்

எமது சங்கத்தின் பாற்பொருள்கள் 01.09.2009இலிருந்து பின்வரும் விவரப்படியான விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

| | மொத்த விற்பனை விலை | சில்லறை விற்பனை விலை |
|---|---|---|
| யோக்கட் (80கிராம்) | ரூபா 15.00 | 17.00 |
| ஐஸ்கிறீம் (80 கிராம்) | ரூபா 17.00 | 20.00 |
| சுவைப்பால் (200 மி.லீ.) | ரூபா 15.00 | 17.00 |
| மில்க்லொலி | ரூபா 05.00 | 06.00 |

தேவையானோர் எமது தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள பாற்பொருள் விற்பனைப் பகுதியிலும் எமது விற்பனைப் பிரதிநிதிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். தொலைபேசி இல.: 0602212926 (சி/560861)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற
**திருமதி திருச்செல்வம் அன்னலட்சுமி**
அவர்கள் 06.09.2009 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/சென்.மேரிஸ் வித்தியாலயம்.
(88751)

## மரண அறிவித்தல்

## செல்லத்தம்பி மகேஸ்வரி



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி மகேஸ்வரி நேற்று (10.09.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பியின் அன்பு மனைவியும் மகேந்திரராஜா (யாழ்ப்பாணம்), தர்மபாஸ்கரன் (கனடா), ரவீந்திரன் (ரவி- R.V.TEX, யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற உஷாதேவி மற்றும் நாகேஸ்வரன் (நடராசா-சுவிஸ்), பிரபாகரன் (சந்திரன்-வவுனியா), கலாதேவி (ஜேர்மன்), சதாகரன் (பற்குணன்-சுவிஸ்), சிறீகரன் (சிறீ-கனடா), கெங்காதரன் (வவி-கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.09.2009) பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்மார்
செ.மகேந்திரராஜா,
செ.ரவீந்திரன்.

புதுவீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம். (88755)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம்

தரம் 6 - 11 வரை வடமராட்சி எல்லைக்குள் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு :- 077 6346662

## எமது தீவக மைந்தனை வாழ்த்துகின்றோம்



எமது தீவக மண்ணின்
மைந்தனும் சமூக சேவைகள்
மற்றும் சமூக நலத்துறை
அமைச்சின் யாழ். மாவட்ட மக்கள்
தொடர்பாளரும் ஈழமக்கள்
ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) யின்
யாழ். மாவட்ட அமைப்பாளருமான

**சில்வஸ்ரர் அலன்ரின் (உதயன் தோழர்)**

அவர்கள் (03.09.2009) வியாழக்கிழமை அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவியேற்றுக் கொண்டதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு, எமது அமைச்சரின் வழிகாட்டலில் மக்கள் பணிகள் பல செய்து பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்,
நெடுந்தீவு

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சிவகடாட்சம் சந்திரகுமார்
அதிபர் சேவை தரம் 1

எமது பாடசாலையின்
முன்னாள் அதிபர்
திரு.சிவகடாட்சம்
சந்திரகுமார்
அவர்கள் அதிபர் சேவை
தரம் 1 (SLPSI) இற்கு
உயர்வு பெற்றமையையிட்டு அவரைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்

## மக்கள் பணிதொடர.... மனமார வாழ்த்துகின்றோம்



கௌரவ
அமைச்சர் திரு.கே.என். டக்ளஸ் தேவானந்தா
அவர்களின் வழிகாட்டலில்



யாழ்.குடாநாடு தழுவிய மக்கள் பணியில் தன்னை இணைத்துக்கொண்டு, இங்கு வாழ் மக்கள் அனைவரினதும் பிரச்சினைகளை அறிந்து அவற்றுக்கு பொருத்தமான தீர்வுகளை வழங்கிவருவதுடன், சமூக மேன்மைக்காக அயராது உழைத்து வருபவருமான சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சின் யாழ்.மாவட்ட மக்கள் தொடர்பாளரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) யின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான

**சில்வஸ்ரர் அலன்ரின்**
(உதயன் தோழர்)

அவர்கள் (03.09.2009) வியாழக்கிழமை அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைவதோடு, மேன் மேலும் மக்கள் பணிதொடர்ந்து சிறப்புற்று நீடுழி வாழ வாழ்த்து கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்
**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.**

## தவறிவிட்டது

சரவணை தேவராசா என்பவருடைய A 054163,இலக்கம் கொண்ட Driving Licence தெல்லிப்பழை துர்க்கை அம்மன் திருவிழாக் காலத்திலும், (09.09.2009) அன்று மானிப்பாய் இந்துக் கல்லூரியிலிருந்து மல்லாகத்திலுள்ள வீட்டிற்கு வரும் போது, பாடசாலை பையுடன் NPGQ 9942 மோட்டார் சைக்கிலுக்கு வரி செலுத்திய அனுமதிப் பத்திரமும் காப்புறுதிப் பத்திரமும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 060 221 9664 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் . தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சரவணை தேவராசா T.P - 060 221 9664

## கைலாசபதி நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 9 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்றுவரும் நினைவுப் பேருரைத் தொடரில் இன்று பி.ப 3 மணிக்கு பேராசிரியர் க.கைலாசபதி நினைவாக நினைவுப் பேருரை நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி எஸ். கே. யோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'Teaching Profession - Teacher's Attitude Towards English' (கற்பித்தலில் வாண்மைத்துவம் - ஆங்கிலம் தொடர்பான ஆசிரியர்களின் மனப்பாங்கு) எனும் தலைப்பில் யாழ். பல்கலைக் கழக மொழியியற்றுறைத் தலைவர் கலாநிதி திருமதி சு.ரமேஸ் உரையாற்று வார். ஆர்வலர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம். (06)

## கிருஷ்ண ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்.வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய கிருஷ்ண ஜெயந்தி விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் 108 சங்காபிஷேகமும் நடைபெற்று அதனைத்தொடர்ந்து விசேட தீபாராதனை, சகஸ்ரநாம அர்ச்சனை என்பனவும் இடம்பெறும்.

நள்ளிரவு 12 மணிக்கு ஜனன பூசை, தாலாட்டு என்பன இடம்பெற்று சுவாமி வசந்த மண்டபத்திற்கு எழுந்தருள்வார்.

நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வந்து தொடர்ந்து உறியடி உற்சவம் நடைபெறும். (203-204)

* * *

யாழ்ப்பாணம், செப்.11

மட்டுவில் வடக்கு புதரன்கேணி வளவு மகா காளி அம்பாள் ஆலயத்தில் இன்று கிருஷ்ண ஜெயந்தி விழா நடைபெறவுள்ளது. (1-207)

## மனித உரிமை ஆணைக்குழுவில் தபால் மூலம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 11

கிளிநொச்சி, இரத்தினபுரத்தைச் சேர்ந்த கார்த்திகேசு அருள்கோபி (வயது 36) என்ற குடும்பஸ்தரைக் காணவில்லை என அவரது மகளான அருள்கோபி சத்தியதேவி மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தபால் மூலம் அவர் இந்த முறைப்பாட்டை கடந்த 9 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளார்.

யுத்தம் காரணமாக வவுனியாவுக்கு செல்வதாகக் கூறிச்சென்ற தமது தந்தையை காணவில்லை என்றும் அவரைக் கண்டு பிடித்துத்தருமாறும் அவர் தனது முறைப்பாட்டில் கேட்டுள்ளார். (1-25)

## காளான் பயிர்ச்செய்கை விவசாயிகளுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம், செப்.11

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தினர் மாவட்ட விவசாயிகள் ஊடாக காளான் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த திட்டத்திற்கென 40 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு தலா பத்துப் பேர் வீதம் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் முதற்கட்டப் பயனாளிகளுக்கு அண்மையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு விவசாய உபகரணங்களும் உள்ளீடுகளும் வழங்கப்பட்டதாகவும் இரண்டாம் கட்டப் பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## விஞ்ஞான தொழில்நுட்ப நிலையம் இன்று திறப்பு

வடமராட்சி, செப்.11

இனப்பிரச்சினைக்கான அனைத்துக் கட்சி தெரிவுக்குழுவின் தலைவரும், விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சருமான திஸ்ஸவிதாரண இன்று காலை கரவெட்டிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கரவெட்டிப் பிரதேச செயலகத்தினால் அமைக்கப்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப வள நிலையத்தை அமைச்சர் திறந்து வைப்பார். (1 - 236)

## சுழிபுரம் பகுதியில் நாற்று மேடைகள்

சுழிபுரம், செப். 11

சுழிபுரம், பறாளை வயல் காணிகளில் நெல் விதைப்புக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வரும் வேளையில் நெல் நடுகைக்கான நாற்று மேடையும் போடப்பட்டு வருகின்றன.

வயல் சொந்தக் காரர்கள் எதற்கும் தயாராக தங்கள் செயற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

மழை அதிகம் பெய்தால் பயிர் அழிவு ஏற்படும். இதனைக் [illegible] நாற்று மேடை [illegible] பவர்களுக்கு பயிர் விற்பனை செய்யவும் ஏற்பாட்டை முற்கூட்டியே செய்துள்ளனர். (1-28)

*சக்கராழ்வார் துணை*

## வடகோவை ஸ்ரீ சக்கராழ்வார் கோவில் இரதோற்சவம்

இன்று வெள்ளிக்கிழமை (11.09.09) காலை 9 மணி
உறியடி உற்சவம்:- இன்று மாலை 5 மணி

**தேரேறும் சக்கராழ்வார்**

பார்த்த சாரதி இன்று தேரேறி வருகின்றான்
பார்க்கும் அடியவர்க்கு அருள் தர வருகின்றான்
காக்கும் இறைவனாம் மாலவன் - எம்
நாக்கும் உச்சரித்து உகந்து போற்றிட தேரேறி வருகிறான்
சீர்மிகு கோவை ஸ்ரீ சக்கராழ்வார் தொழுமடியார்க்கு
சீர் பெருக்க சித்திரத் தேரேறி இன்று வருகிறான்
அற்புதச் செதுக்காலே தேர்ச் சிற்பங்கள் யாவும் - ஐயன்
ஸ்ரீ சக்கராழ்வார் அருள் புகழ் எடுத்தியம்பிடு தேரேறி
வருகிறான்.
சித்திரத்தேரிலே இன்னே ஏறிடும் அற்புதச் சக்கரம்- இன்றே
நித்தியமாய் உறியடியும் கண்டருள் ஐயனே
ஸ்ரீ சக்கராழ்வாரே போற்றி வாழ்த்தி வணங்குகின்றோம்
நின் இவ் உலகடியார் படும் துயரம் நீக்கி அருள்புரிந்து
நீடு புகழ் சேர் கோவை ஸ்ரீ சக்கராழ்வார் தேரேறி உறியடியும்
கண்டருள்வாயே

**கோவையூர் கவி**

தீர்த்தக் கொடியிறக்கல் வைபவம்: பகல் 12 மணி (சனிக்கிழமை 12.09.2009)
பூங்காவனம் ஞாயிற்றுக்கிழமை - பிற்பகல் 3 மணி 13.09.2009
ஆஞ்சநேயர் பொங்கல் திங்கட்கிழமை - காலை 9 மணி 14.09.2009

சக்கராழ்வார் தேவஸ்தானம்,
கோப்பாய் வடக்கு.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக் கிருத்திய அழைப்பும்



திருமதி
**இலட்சுமி இளையதம்பி**
தோற்றம்: 23★06★1928
மறைவு: 12★08★2009

அன்பிற்கு இலக்கணமாய்,
பண்பில் உயர்ந்தவராய்,
பாசத்தின் உறைவிடமாய்,
எம்மோடு வாழ்ந்தவரே,
எங்கு சென்றீர்களோ,
ஒருமாதம் ஓடி மறைந்ததம்மா,
எங்கள் உயிருள்ளவரை உமை மறவோம்,
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.09.2009) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).*

*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.* (C/560873) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### *வைத்தியலிங்கம் தட்சணாமூர்த்தி* (குலம்)



முதலாம் வட்டாரம், நயினாதீவைப் பிறப்பிடமாகவும், காரைதீவு, மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் நாகரிப்பக்குளம், வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் தட்சணாமூர்த்தி 09.09.2009 புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியலிங்கம் மற்றும் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாலாம்பிகையின் அன்புக் கணவரும், சிந்துஜா (ஆசிரியை, நெடுந்தீவு), அனோஜா (ஆசிரியை, கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய்), நிறோஜா (சேவாலங்கா, வவுனியா), டர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நீலாயதாச்சி (ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை), நடேசமூர்த்தி (வவுனியா) ஆகியோரின் அன்புச்சகோதரனும், செந்தூரன் (நெடுந்தீவு), எடிஅறீசன் (சிறைச்சாலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்),சிவநேசன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாகரிப்பக்குளம் வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (11.09.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வனிதா வாசம்,*
*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.*

தகவல்:
எ.அ.அனோஜா (மகள்).

### அருட்சகோதரி கனீசியஸ் பிலிப்புப்பிள்ளை தி.கு

நானாட்டானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்.திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவரும் தற்போது மன்னார் திருக்குடும்ப இல்லத்தில் வசித்தவருமாகிய அருட்சகோதரி கனீசியஸ் பிலிப்புப்பிள்ளை (08.09.2009) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் இணைந்து விட்டார்.

இவரது பூதவுடல் இன்று (11.09.2009) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில் நடைபெறும். இரங்கல் திருப்பலியின் பின்னர், மன்னார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*121, பிரதான வீதி*
*யாழ்ப்பாணம்*

தகவல்:
அருட் சகோதரி போலன்ட் மத்தியாஸ்
(மாகாணத் தலைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின்
யாழ்.மாவட்ட அமைப்பாளர்
**சில்வெஸ்ரர் அலன்ரின் (உதயன் தோழர்)**
அவர்கள் 03.09.2009 வியாழக்கிழமை அகில இலங்கை சமாதான நீதிவானாக (J.P.) பதவிபெற்றுக்கொண்டதையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைவதோடு எமது அமைச்சரின் வழிகாட்டலில் மக்கள் பணி பல செய்து பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

**தொண்டர் ஆசிரியர் சங்கம்,**
**யாழ்.மாவட்டம்.**
(88763)

## கண்ணீர் அஞ்சலி



புதிய உயர்கல்லூரி இயக்குநர்கள்
திரு.திருமதி சண்முகநாதன் அருள்நங்கை
அவர்களின் அன்பு நிறைந்த புத்திரன்
**சண்முகநாதன்**
**சந்துதன்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(88762) தொண்டர் ஆசிரியர் சங்கம், யாழ்.மாவட்டம்.

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து) பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

*பதவி* - செயலாளர் 114/02
*சம்பளத் திட்டம்*- 14950-280 x [illegible]0-300 x 10-20750

**தகைமைகள்**

01.கூட்டுறவு ஊழியர் 03ஆவது சம்பளத்திட்ட பதவியில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 04 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக்குறைந்தது 06 ஆண்டுகால அனுபவம்

*அல்லது*

02.அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமமான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை நிலையிலான பதவியில் ஆகக்குறைந்தது 10 ஆண்டுகால அனுபவம். இதில் சிரேஷ்ட முகாமை நிலைப் பதவியில் ஆகக்குறைந்தது 06 ஆண்டுகால கட்டாய அனுபவம்.

*அல்லது*

03.கூட்டுறவு, முகாமை தொடர்பான டிப்ளோமா பயிற்சிப்பத்திரம்/ க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவன மொன்றில் ஆகக்குறைந்தது 12 ஆண்டுகால அனுபவம். இதில் சிரேஸ்ட முகாமை நிலைப்பதவியில் ஆகக்குறைந்தது 06 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

வயதெல்லை- *30* தொடக்கம் *50* வரை

1. கூட்டுறவு நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
2. நிறுவனங்களில் கடமைபுரிபவர்கள் நிறுவனத்தின் ஊடாக நிறுவனத்தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
3. விண்ணப்பப் படிவத்துடன் சகல தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்படல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி கணனி பற்றிய அறிவுடையவராகவும், ஆங்கில அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
5. கூட்டுறவுப் பணியாள்ளகள் தமது சேவைக்காலத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் பதவி நிர்ணய அங்கீகார கடிதப் பிரதி இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்காதவிடத்து குறிப்பிடும் சேவைக்காலம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
6. தெரிவு செய்யப்படுபவர் சபையினால் விதிக்கப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
7. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''செயலாளர் பதவிக்கான விண்ணப்பம்'' என குறிப்பிடல் வேண்டும்.
8. விண்ணப்ப முடிவு திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், தகைமைச்சான்றிதழ்களின்பிரதி இணைக்கப்படாத விண்ணப்பங்களும், முழுமையாக பூரணப் படுத்தப்படாத விண்ணப்பங்களும், உரிய அடிப்படைத் தகைமை அற்ற விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். இது பற்றி விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படமாட்டாது.

விண்ணப்ப முடிவு திகதி: 07.10.2009 பி.ப 4.00 மணி. விண்ணப்பப்படிவத்தினை ரூபா 20.00 செலுத்தி கடமை நேரத்தில் சபையில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தலைவர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதி, 2ஆம் மாடி, இல 12, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

*தலைவர்.*
*யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை,*
*இல 12, கே.கே.எஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(பி/560868)

பெண்கள் சிறுவர்களுக்கான ஆடைகளை நவீன வடிவில் தைத்திடவும்,
பாடசாலைப் பிள்ளைகளுக்கான சீருடைகள்,
எம்புறொய்டிங் மற்றும் பிறிண்ரிங் ரைகளுக்கும்
சக்தி
பெண்கள் தையலகம்
SHAKTHI GARMENTS
235, பருத்தித்துறை வீதி. நல்லூர், யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு அருகாமையில்)

நோபிள் பிறிண்ரேர்ஸ்
545 பருத்தித்துறை வீதி, நல்லூர்
15 நிமிடத்தில்
நவீன தொழில் நுட்பத்திலாலான
றபர் ஸ்ராம்களிற்கும்
உயர் தரத்திலான
பிளாஸ்ரிக் அடையாள அட்டைகளிற்கும்
021 2228134

## கிருஷ்ணஜெயந்தி சிறப்பு நிகழ்வுகள்

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயிலில் இன்று வெள்ளிக்கிழமை இரவு இடம் பெறும் கிருஷ்ண ஜெயந்தி விழாவில் சிறப்பு நிகழ்வுகளாக, 'தெய்வீக நற்சிந்தனை' என்னும் தலைப்பில் இயல், இசை வாரிதி ப.ஞானேந்திரனும், 'பூஜ்யம்' என்னும் தலைப்பில் பண்டிதர், சைவப்புலவர் பொன். சுகந்தனும் சிறப்புரையாற்றுவார்கள்.

அத்துடன் நுண்கலைப் பட்டதாரி ந.சஞ்சீவன் குழுவினரின் பக்திப்பாடல்களும் சத்தியதாசன் குழுவினரின் வில்லுப்பாட்டும் நடைபெறும்.

### யாழ்.பல்கலையில் தடகளப் போட்டி

யாழ்ப்பாணப் பல்லைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டிகளில் இன்றுகாலை 7 மணி முதல் பி.ப. 2 மணி வரை தடகள விளையாட்டுப்போட்டிகளும்3மணிக்கு உதைப்பந்தாட்டப்போட்டியும் நடைபெறவுள்ளன.

### "அருள் ஒளி" மாத இதழ் வெளி வந்துள்ளது

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தால் மாதம் தோறும் வெளியிடப்படும்அருள்ஒளி ஆன்மீக சஞ்சிகையின் ஆவணிமாத இதழ்வெளிவந்துள்ளது.

இந்த மாத இதழ் திருமஞ்சம் வெள்ளோட்ட விழா சிறப்புமலராகஆலய முகப்புத் தோற்றம், திருமஞ்ச மாதிரிப் படம் ஆகியவற்றை அட்டைப் படமாகத் தாங்கி வெளிவந்துள்ளது.

இச்சிறப்பு மலர், தேரின் தத்துவம், தேரின்சிற்பக்கலை, திருமஞ்சத்தின் மகிமை போன்ற பல கட்டுரைகளும் புதிதாக அமைக்கப்பட்ட திருமஞ்சத்தின் படம், திருமஞ்சவெள்ளோட்ட விழாக் காட்சிகளின் படங்கள் போன்ற விடயங்கள் உள்ளடங்கலாய் அமைந்துள்ளது. (201)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பாலை மரக் கடை நிலையும், கதவுகளும் 10X8 விற்பனைக்குண்டு.

*பத்மாஸ், 398, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்.பஸ் நிலையம் முன்னால்.*
(88764)


## வாழ்த்துகின்றோம்

ABC

தனது இரண்டாவது
ஆண்டில் காலடி பதிக்கும்
**Medical Clinic**
**மெடிக்கல் கிளினிக்**
*(மயிலணி - சுன்னாகம்)*
மேலும் அதன் பணி சிறப்புற வைத்திய அதிகாரி, பணியாளர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

**சுன்னாகம் வாழ் மக்கள்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




சித்த ஆயுள்வேத வைத்திய சபையின் தேர்வுகளில் சித்தியடைந்து பதிவு செய்யப்பட்ட வைத்தியத்துறைச் சபையினரால் சான்றிதழும் பாராட்டும் RAMP பட்டமும் பெற்ற அதிபர்
**திரு.க.க.யோகநாதன்**
**(B.A.Dip.in.ED.)**
அவர்களுக்கு எமது உள்ளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

சீரோங்கும் சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில்
சிறப்பு மிகு அதிபராய் மிளிர்கின்ற
பேரோங்க ஆயுள்வேத வைத்திய சபையின்
பதிவு செய்த வைத்தியனாய் உயர்வு பெற்று
பாரோங்கப் பட்டங்கள் பலவும் பெற்று
பலரும் போற்றி வாழ்ந்திடவும்
ஊரோங்கி வாழ்வு பெற வழிகாட்டும்
உத்தமரே பல்லாண்டு வாழி!, வாழி!

யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்,
ஆசிரியர்கள், கல்விசார் ஊழியர்கள், மாணவர்கள்.
(88760)

## முதலாம் ஆண்டு நினைவாக.....



அமரர்

10.03.1927

21.09.2008

திதி
11.09.2009

## மாரிமுத்து அப்புத்துரை

*எங்கள் குடும்பத்தின் குல விளக்காய் திகழ்ந்து*
*பாசமுடன் எம்மை அரவணைத்து*
*நல்வழி காட்டி எம்மை ஆளாக்கிவிட்டு*
*இறையடி சேர்ந்த அன்புத்தெய்வத்தின்*
*ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.*

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

205/4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வில் இனப்பிரச்சினைக்கான அனைத்துக் கட்சித் தெரிவுக்குழுவின் தலைவரும் விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண மங்கள விளக்கேற்றுவதையும் அவர் உரையாற்றுவதையும் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையுரை நிகழ்த்துவதையும் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இரண்டரை லட்சம் வன்னி அகதிகள்
# எந்தச் சட்டத்தின் கீழ் தடுத்துவைப்பு?

## அரசிடம் விளக்கம் கேட்கிறார் ரணில்



கொழும்பு,செப்.11

இந்நாட்டில் நடைமுறையில் உள்ள எந்தச் சட்டத்தின் கீழ் வவுனியா அகதி முகாம்களில் இரண்டரை லட்சம் அகதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

இந்த மக்கள் உடனடியாக மீள்குடியமர்த்தப்பட வேண்டும் என்றும் மீள்குடியேற்றத்தைக் கண்காணிக்க எம்.பிக்கள் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா அகதி முகாம்களில் சுமார் இரண்டரை லட்சம் மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சொற்ப எண்ணிக்கையிலானோர் மாத்திரம் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த முகாம்களில் புலிகள் உள்ளனர் என்று படையினர் தெரிவித்துள்ளனர். இதுவரை 9 ஆயிரம் புலிகள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. அத்தோடு 10 ஆயிரம் புலிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர் என்று அரசு தெரிவித்துள்ளது.

முகாம்களில் புலிகள் இருப்பது உண்மையென்றால் கடந்த மூன்று மாதங்களுக்குள் அவர்களை அங்கிருந்து பிரித்தெடுத்திருக்கலாம். அங்கு புலிகள் உள்ளார்கள் என்பதற்காக மீதி மக்களைத் தடுத்து வைத்திருக்க முடியாது.

இந்த மக்களை எதிர்க்கட்சி எம்.பிக்கள் பார்க்கவும் முடியாது. அதற்கு அரசு அனுமதி வழங்குவதில்லை. அவர்களைப் பார்க்க எதிர்க்கட்சிகளுக்கு என்ன தேவை இருக்கின்றது என்று அரசு கேட்கின்றது. இது நியாயமற்ற கேள்வி.

எதிர்க்கட்சி எம்.பிக்களான எம்மை ஏன் அரசு அனுமதிப்பதில்லை. இந்த அகதிகள் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்நாட்டில் நடைமுறையில் இருக்கும் எந்தச் சட்டத்தின் கீழ் இந்த மக்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்?

இந்த மக்களை இப்படித் தடுத்து வைக்க அரசியலில் எந்தச் சட்டத்திலும் இடமில்லை. மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் இடமில்லை. நீதிமன்ற உத்தரவில்லாமல் அவர்களைத் தடுத்து வைக்க முடியாது.


இந்த மக்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தனரா? 65 வயதுக்காரர்களும் சிறுவர்களும் எப்படி தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கமுடியும்? இரண்டரை லட்சம் மக்கள் அப்படி அச்சுறுத்தலாக இருக்க முடியுமா?

யுத்த காலத்தின் போது அரசுதான் இந்த மக்களை அழைத்தது. அப்படி மக்களை அழைத்து எப்படிஇவ்வாறு தடுத்துவைக்க முடியும்? அகதிகள் தொடர்பாக சர்வதேச சட்டம் மதிக்கப்படல் வேண்டும்.

இந்த மக்கள் உடன் மீள் குடியமர்த்தப்படல் வேண்டும். இதைக் கண்காணிக்க எம்.பிக்கள் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும். அதேபோல சர்வதேச நாடுகளில் உள்ளவர்கள் அகதிகளின் விவரங்களை அறிய ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

அதேபோல், அவசரகாலச்சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். நாம் அனைவரும் பேசிச் செய்யலாம். அப்படி இல்லாவிட்டால் நாம் அதைக் கடுமையாக எதிர்க்க வேண்டிவரும். இல்லையேல் நாம் மாற்று நடவடிக்கைக்குச் செல்வோம் - என்றார்.

## செங்கையாழியானுக்கு 'சாகித்திய ரத்னா' விருது



யாழ்ப்பாணம், செப். 11

மூத்த எழுத்தாளர் கலாநிதி க.குணராசா (செங்கையாழியான்) 'சாகித்திய ரத்னா' விருது பெறுகிறார். இலக்கியத்துறைக்கும் அவர்பலதுறைகளிலும்ஆற்றிய சேவைக்கும்திறமைக்கும் இந்த விருது வழங்கப்படுகிறது.

எதிர்வரும் திங்கட்கிழமை 14 ஆம் திகதியன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் சிறப் புமிகு உயர் விருதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவருக்கு வழங்கிக் கௌரவிப்பார்.

அரச நிர்வாக சேவையில் மூத்த அதிகாரியான இவர் எழுத்துத்துறையில் பல்வேறு வகையான படைப்புக்களையும் கல்விசார் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். (அ-1)

## உடுவில் கல்லூரி மாணவரை கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுமாறு நிர்வாகத்தினர் வேண்டுகோள்

உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பை கைவிட்டு 'பாடசாலைக்குச் சமுகமளித்து' கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். தமது கல்விக் காலத்தை வீணடிக்காது பயனுள்ள தாக்கிக் கொண்டு எதிர்கால சுபீட்சத்துக்கு வழி செய்ய வேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் உடுவில் மகளிர் கல்லூரியினதும் தென்னிந்திய திருச்சபையினதும் சிரேஷ்ட வழக்கறிஞரான சட்டத்தரணி எம்.ஏ.சுமந் திரன்.

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் பதவி நீக்கப்பட்டமை, அதனைத் தொடர்ந்து நடைபெற்று வரும் மாணவர் பகிஷ்கரிப்பு தொடர்பாக நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்தப்பின் போதே சட்டத்தரணி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இச் சந்திபில் தென்னிந்திய திருச்சபையின் அதீனச் செயலாளர் வண. ஆர். இராஜ்குமாரும் கலந்துகொண்டார்.

கல்லூரியின் முன்னாள் அதிபர் பதவி விலக்கப்பட்டதற்காக சட்ட ரீதியான காரணங்களையும் சட்டத்தரணி எம்.ஏ.சுமத்திரன் ஊடகவியலாளரிடம் விவரித்தார். (அ-86)

## வடக்கு,கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மக்களை உடனடியாகக் குடியமர்த்தி அவர்களுக்குத் தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது அரசின் பொறுப்பு. மக்கள் அகதிபோல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களைச் சந்திக்கும் உறவினர்களுடன் உரையாடமுடியவில்லை.

அரசின் மீள்குடியேற்ற நடவடிக்கை தொடர்பில் சர்வதேசம் மகிழ்ச்சியடையவில்லை. முகாம்களைச் சுற்றி படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமிழ் படையினர் அல்லர். இந்த அகதிகளை அந்தப் படையினர் பாசத்துடன் நடத்தமாட்டார்கள்.

அகதி முகாம்களில் மக்கள் குடியமர்த்தப்படும்போது இடம்பெயர்ந்து தற்போது புத்தளத்தில் உள்ள முஸ்லிம்களும் குடியமர்த்தப்படவேண்டும் என்று நாம் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டோம். இது சமகாலத்தில் இடம்பெறவேண்டும்.

மீள்குடியேற்றம் தொடர்பான அரசின் தற்போதைய கொள்கைத் தொடர்பில் எம்மால் மகிழ்ச்சியடைய முடியாது. நாம் முகாம்களுக்குச் சென்று அம் மக்களைப் பார்வையிட்டு அவர்களுக்குச் சேவை செய்யவும், மீள்குடியேற்றத்திற்கு உதவவும் விரும்புகிறோம்.

பருவ மழை ஆரம்பமாகப் போகிறது. அது ஆரம்பமானால், நிலைமை இன்னும் மோசமாகும். அதற்கு முன் மக்கள் மீள் குடியமர்த்தப்படவேண்டும்.

கண்ணிவெடிகள் அகற்றலைக் காரணங்காட்டி மீள்குடியேற்றத்தைத் தாமதப்படுத்த முடியாது. கண்ணிவெடிகள் அகற்றத் தேவையில்லாத பகுதிகள் தொடர்பாக நாம் அரசிடம் பட்டியல் ஒன்றைக் கையளித்துள்ளோம். அந்த இடங்களில் முதலில் மக்களை மீள்குடியமர்த்தலாம்.

இந்த மக்கள் கடந்த மூன்று வருடங்களாக துன்பம் அனுபவித்து வருகின்றனர். புலிகள் அழிந்ததன் பின்பும் மக்கள் துன்பப்படவேண்டுமா? முகாமில் உள்ள நூறு, இருநூறு புலிகளைக் கண்டுபிடிப்பதற் காக இந்த மக்கள் அனைவரையும் தொடர்ந்து அரசு தடுத்துவைக்கப் போகிறதா?

வடக்கு, கிழக்கில் இயங்குகின்ற துணை ஆயுதக் குழுக்கள் முற்றாகக் கலையப்பட வேண்டும். யுத்தக் காலத்தின்போது அக்குழுக்களின் தேவை அரசுக்கு இருந்திருக்கலாம். அதனால், அக்குழுக்கள் இருப் பது மக்களின் சுதந்திரத்திற்கு அச்சுறுத் தலாக அமைந்துள்ளது.

இதேபோல், வடக்கு, கிழக்கில் உள்ள உயர்பாதுகாப்பு வலயம், இராணுவ முகாம்கள், சோதனைச்சாவடிகள் உடன் நீக்கப் படவேண்டும். இவற்றைப் புதிதாக அமைக்கும் நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும்.

அந்தப் பகுதியில் புதிதாகப் படையினர் குவிக்கப்படுவது நிறுத்தப்படவேண் டும். படையினரின் இருப்பு மக்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள் ளது. எமது மக்கள் அடிமையாகவே நடத் தப்படுகின் றனர். பெரும் எண்ணிக்கையிலான படையினர் வடக்கு, கிழக்கில் இருப்பதால் அர சின் புலனாய்வு நடவடிக்கைக்கும் தடை ஏற்ப டும். வடக்கு, கிழக்கில் யுத்தத்திற்கு முன்பு இருந்த நிலை மீண்டும் ஏற்படுத் தப்பட வேண்டும்.

அதேபோல் எமது எம்.பிக்களின் பாதுகாப்பையும் அரசு அதிகரிக்கவேண்டும். நாம் மூன்று எம்.பிக்களை இழந்திருக்கின்றோம். நாம் வடக்கு, கிழக்கில் அரசியல் செய்வதற்கு வசதியாக அரசு எமது பாது காப்பை அதிகரித்துத் தரவேண்டும். - என்றார். (சி)

## ஐக்கிய இலங்கைக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்தார் அனைத்துக் கட்சித் தெரிவுக் குழுவின் தலைவரும், அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 'இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு' என்னும் பொருளில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பல்பலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் பொதுமக்கள் என்று பெரும் எண்ணிக்கையானோர் பங்குபற்றினர்.

அனைத்துக்கட்சி குழுவின் தலைவர் நேற்றைய தமது உரையில் குறிப்பிட்ட முக்கிய தகவல்கள் மற்றும் விவரங்கள், உத்தேச அம்சங்கள் வருமாறு:-

* நாட்டின் சகல பிரிவு மக்களும் - எல்லோரும் - ஒற்றுமையுடன், ஒத்துழைப்புடன் - இணக்காப்பாட்டுடன் கொண்டு வரும் தீர்வாக அமைய வேண்டும் என்பதே அரசினதும், ஜனாதிபதியினதும் நோக்கமாகும் - இலக்குமாகும்.

* உத்தேச தீர்வு அநேகமாக இந்தியாவின் ஆட்சி முறையை ஒத்ததாக அமையும்.

* சிங்களமும் தமிழும் நாட்டின் நிர்வாக மொழிகளாகப் பிரகடனப்படுத்தப்படும். அத்துடன் ஆங்கிலத்துக்கும் முக்கியத்துவம் வழங்கப்படும்.

* சட்டம் இயற்றும் அதிகாரமும் நிறைவேற்று அதிகாரமும் மாகாண சபைகளுக்கு இருக்கும்.

மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் உள்ள இணை அதிகாரங்கள் மத்திய அரசினாலேயே செயற்படுத்தப்படும்.

* மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவதை ஜனாதிபதி விரும்பவில்லை.

* அதிகாரப் பரவலாக்கத்தின் ஓர் அம்சமாக மூதவை ஒன்று அமைக்கப்படும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் இருந்து தெரிவு செய்யப்படும் 7 பிரதிநிதிகளை உள்ளடக்கி, மொத்தம் 63 உறுப்பினர்கள் செனட்சபையில் அங்கம்வகிப்பர்.

அவர்களுடன் மேலதிகமாக மலைநாட்டுத்தமிழர் மற்றும் முஸ்லிம் இனத்தவர்களுக்கென தலா 5 உறுப்பினர்கள் வீதம் 10 உறுப்பினர்கள் செனட் சபைக்கு மேலதிகமாக தெரிவு செய்யப்படுவர். ஜனாதிபதியால் நியமிக்கப்படும் உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாக செனட் சபை அமையும்.

* ஒவ்வொரு நூறு வீடுகளைக் கொண்ட பிரதேசத்தை உள்ளடக்கிய கிராம சபைகள் அமைக்கப்படும். இவை இரண்டு கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் அமையும். ஒவ்வொரு கிராமசபைகளாலும் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு உறுப்பினர் பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் வித்திலும் இந்திய பஞ்சாயத்து முறையையொத்த கீழ்மட்ட நிர்வாக அமைப்பு உருவாக்கப்படும்.

* இலங்கையின் இனப்பிரச்சினை உலகத்தின் தொடர் பிரச்சினைகளில் ஒன்றாகவே நீடித்து வருகிறது. இதற்கு முடிவுகட்ட நாம் எமக்கென ஒரு சொந்தத் தீர்வை உருவாக்குவது அவசியம்.

* எமது நாட்டின் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு உலக நாடுகள், பலமுள்ள நாடுகள், தமது வர்த்தக நலன்களை முதன்மைப்படுத்திய உள்ளோக்கத்துடன் செயற்படுவதே பிரதான காரணம்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் அமைச்சர் பதிலளித்தார். (அ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியைக் கொல்வதற்கான சதித்திட்டங்கள் தொடர்கின்றன

## சபையில் அமைச்சர் நிமால் தெரிவிப்பு

கொழும்பு, செப். 11

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கொலை செய்வதற்கு தொடர்ச்சியாக சதித் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் அவசரகாலச் சட்டத்தை எதிர்ப்பவர்கள் ஜனாதிபதியைக் கொலை செய்வதற்குத் துணை போகின்றவர்கள்.

அவசர காலச்சட்ட நீடிப்பு பிரேரணையை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து இந்நாட்டு மக்கள் அச்சமின்றி நடமாடுகின்றனர். அன்றாட பணிகளை சுதந்திரமாகச் செய்து வருகின்றனர். இந்த நிலைமையைத் தொடர்ந்து பாதுகாப்பதே எமது பொறுப்பு.

பல வருடங்களாக இந்நாட்டில் இருந்த பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பயங்கரவாத மரத்தின் வேர்கள் நாட்டின் பல இடங்களில் பரவியிருந்தன. அதையும் நாம் அழித்து வருகிறோம்.

பயங்கரவாதத்தால் இழந்த உயிர்கள் எண்ணில் அடங்கா. இனியும் அந்தப் பயங்கரவாத மரம் விரைவாக வேர் பரப்பலாம். அதை இனி யாரும் விரும்பப்போவதில்லை.

இதை முற்றாக ஒழிப்பது இலகுவான காரியமல்ல. அவசர காலச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் நாம் இந்த விடயத்தை இலகுபடுத்தலாம்.

வடக்கிலும், கொழும்பிலும் படையினரால் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

அதேபோல் வவுனியா அகதி முகாம்களில் அகதிகளுடன் அகதிகளாக புலிகள் இருக்கின்றனர் என்று படையினர் தெரிவித்துள்ளனர்.

இவர்களை கைது செய்வதற்கும், ஆயுதங்களைத் தேடுவதற்கும் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கவேண்டியது அவசியமாகின்றது.



பாதாள உலகத்தினர் இயங்குவதற்கும் இந்நாட்டில் இடமில்லை. அவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்படவேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் இந்நாட்டிற்கும் எமது படையினருக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சர்வதேச நாடுகள் சில செயற்பட்டு வருகின்றன.

அதேபோல் ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கும் இங்கு சதித்திட்டங்கள் தீட்டப்படுகின்றன. சிலர் இதை விரும்புகின்றனர். அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து அதன் மூலம் பயங்கரவாதம் மீண்டும் இந்நாட்டில் தலைதூக்குவதை அவர்கள் விரும்புகின்றனர்.

ஊவா மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்திற்குச் செல்வதற்கு ஜனாதிபதி தயாரான போது அவர் செல்லவிருந்த ஹெலிக்கொப்டெர் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இடத்தில் கிளைமோர் குண்டுகள் பொருத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றை படையினர் கண்டெடுத்தனர். இதன் மூலம் ஜனாதிபதியை கொலை செய்ய மேற்கொள்ளப்படும் சதித்திட்டங்கள் புலனாகின்றன.

எமது ஜனாதிபதி உலகப் புகழ்பெற்ற ஒருவர். பயங்கரவாதத்தை ஒழித்து இந்நாட்டுக்கு சமாதானத்தைப் பெற்றுத் தந்தவர். எவராலும் செய்ய முடியாத வீரச் செயலைச் செய்த அவர் இந்நாட்டுக்குத் தேவை. நிரந்தர சமாதானத்தை இந்நாட்டில் உருவாக்குவதற்கு அவர் தொடர்ச்சியாக முயற்சி செய்து வருகிறார்.

நாம் இந்நாட்டில் எஞ்சியுள்ள பயங்கரவாதத்தையும் இல்லாதொழிப்போம். அதற்கு இந்த அவசரகாலச் சட்டம் தேவைப்படுகிறது. - என்றார்.

# ஈழத் தமிழரின் உரிமைகளுக்காக காங்கிரஸ் தொடர்ந்து பாடுபடும்

## தமிழகத்தில் ராகுல் காந்தி பேட்டி



சென்னை, செப். 11

இலங்கையில் தமிழ் மக்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக காங்கிரஸ் கட்சி தொடர்ந்தும் பாடுபடும் என்று இந்திய காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் ராகுல் காந்தி தெரிவித்திருக்கிறார்.

தமிழகத்துக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ராகுல்காந்தி, நேற்றுக்காலை ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

''இலங்கையில் தமிழர்களின் நலனுக்காக காங்கிரஸ் கட்சி தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதுவரை வெளியுறவுத்துறை செயலர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரை இலங்கைக்கு அனுப்பி தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்குமாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம்'' என்று ராகுல் காந்தி தெரிவித்தார்.

எங்களது குடும்பம் தமிழர்கள் மீது அன்பும் மரியாதையும் கொண்டுள்ளது. தமிழகத்தில் உள்ள தமிழர்கள் மட்டுமல்ல, உலகமெங்கும் உள்ள தமிழர்கள் அனைவர் மீதும் காங்கிரஸ் அக்கறை கொண்டுள்ளது என்றும் பெருமிதமாகச் சொன்னார் ராகுல்.

இலங்கைத் தமிழர்கள் விடயத்தைப் பொறுத்தவரை அவர்களது உரிமை இலங்கை மண்ணில் நிச்சயம் நிலைநாட்டப்படும். இதனை இந்திய அரசு இலங்கைக்குத் தொடர்ந்தும் வலியுறுத்தும் என்றும் அவர் கூறினார். (அ-சி)

### படையினரிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களம் ஊடாக வெலிகந்தை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்புவதில் பொலிஸாருக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என்றார் அவர். அதனை அடுத்து அதற்கான உத்தரவை நீதிவான் விடுத்தார். (அ-சி)

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்களின் அடிப்படையில் 6,833 பேர் வவுனியாவில் இருந்து இன்று அழைத்து வரப்படவுள்ளனர்.

வவுனியாவில் இருந்து அழைத்து வரப்படும் மக்கள், பிரதேச செயலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் மூலம் உறவினர்களிடம் சேர்க்கப்படுவர். (அ-1)

### யுத்தக்குற்ற..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் இலங்கையும் இடம்பெற்றிருந்தது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முக்கிய அதிகாரியொருவர், இலங்கை குறித்து ஐ.நா. பாதுகாப்புச் சபை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இன்னமும் பரிந்துரை செய்யவில்லை எனக் குறிப்பிட்டார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்குத்தொடுநர் லூயிஸ் மொரெனோ ஒகாம்பே இலங்கை குறித்து அறிக்கைகள் கிடைத்ததை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது ஊர்ஜிதம் செய்தார்.

அவரிடம் உலகில் எந்த நாடுகள் குறித்துக் கவனம் செலுத்தப்படுகின்றது, எந்த நாடுகள் குறித்து விசாரணைகள் இடம்பெறுகின்றன, எங்கு யுத்தக்குற்றங்கள் இடம்பெறுகின்றன என்பதை சித்தரிக்கும் உலக வரைபடம் காணப்பட்டது.

இலங்கையில் யுத்தக்குற்றங்கள் இடம்பெற்றன என்பதைக் காண்பிக்கும் வகையில் உலக வரைபடத்தில் இலங்கைக்கு கீழே பச்சைப் புள்ளி இடம்பெற்றிருந்தது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்குத்தொடுநர் இலங்கை உட்பட சில நாடுகளில் குற்றங்கள் இழைக்கப்பட்டதை ஏற்றுக்கொள்கிறார்.

இப்படி 'இன்னர்சிற்றி பிரஸ்' மேலும் தெரிவித்துள்ளது.

# வன்னி அகதி முகாம்களில் அமைச்சர்கள் 'பிஸ்னஸ்'!

## எதிர்க்கட்சி எம்.பி. 'திடுக்' தகவல்

கொழும்பு, செப். 11

சில அமைச்சர்கள் வவுனியா அகதி முகாம்களுக்கு முன்பாக கடைகளைத் திறந்து அகதிகளுக்கு உணவு விற்பனை செய்து வருகின்றனர் என்று ஐ.தே.கட்சி எம்.பியான தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இந்த அமைச்சர்களின் ஊடாகத்தான் அகதி முகாம்களில் உள்ளவர்கள் ஒருலட்சம் அல்லது ஒன்றரை லட்சம் ரூபா பணம் கொடுத்து அங்கிருந்து தப்பி வருகின்றனர் என்றும் அவர் சொன்னார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

புலிகளின் தலைவர் பிரபாகரன் கொலை செய்யப்பட்டு 4 மாதங்கள் ஆகின்றன. வடக்கில் பயங்கரவாதம் முடிந்ததும் தெற்கில் அமைதி ஏற்படும் என்று நாம் நினைத்தோம். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை.

தெற்கில் ஜனநாயகம் நசுக்கப்படுகின்றது. ஊடகம் மிரட்டப்படுகின்றது. அண்மைக்காலத்தில் ஊடக அடக்குமுறை தொடர்பான 34 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதன் பின்னணியில் உள்ள ஒருவரையேனும் அரசு இதுவரை கைதுசெய்யவில்லை.

சிறையில் இருக்கவேண்டியவர்கள் எல்லாம் இந்த நாட்டில் எம்.பிக்களாக இருக்கின்றனர். கே.பிகூட இந்த அரசில் இணைய விருப்பம் தெரிவித்தால் அவருக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படும்.

கருணா சிறையில் இருக்கவேண்டியவர். ஆனால், இங்கு அமைச்சராக இருக்கின்றார். ஆனால், ஜே.வி.பியினர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் கூட சிறைத்தண்டனை அனுபவித்ததன் பின்பு தான் நாடாளுமன்றுக்கு வந்தனர். கருணா இங்கே எந்தச் சிறையில் இருந்தார்?

தற்போது அமைச்சர்கள் சிலர் வவுனியா அகதி முகாம்களுக்கு முன்பாகக் கடைகளைத் திறந்து உணவுப் பொருள்களை விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த அமைச்சர்களின் ஊடாகத்தான் அகதி முகாம்களில் உள்ளவர்கள் தப்பிச் செல்கின்றனர். அதற்காக அவர்கள் ஒரு லட்சம் அல்லது ஒன்றரை லட்சம் ரூபாவைச் செலுத்தியுள்ளனர் - என்றார்.

# இந்திய அணி இலங்கைக்குச் செல்வதை எதிர்த்த வழக்கு நீதிமன்றில் தள்ளுபடி!

மதுரை, செப். 11

இந்தியக் கிரிக்கெட் அணி இலங்கை செல்வதை எதிர்த்து தாக்கல் செய்த மனுவை மதுரை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்த மனு நீதிபதிகள் பி.முருகேசன், சி.எஸ்.கர்ணன் ஆகியோர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். அவர்கள் தமது தீர்ப்பில்-

வெளியுறவுக் கொள்கை, உள்நாட்டு பாதுகாப்பு, இராணுவம் ஆகியவற்றில் நீதிமன்றம் தலையிடக்கூடாது என்று உச்ச நீதிமன்றின் அரசியல் சாசன ஆயம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தியக் கிரிக்கெட் அணி இலங்கை செல்வது வெளி விவகாரத்துறை சம்பந்தப்பட்ட விடயமாகும். எனவே இந்த விடயத்தில் நீதிமன் றம் தலையிட முடியாது. மனு தள்ளு படி செய்யப்படு கிறது - என்று கூறி உள்ளனர்.

இத்தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றில் உடனடியாக மனுச் செய்து தடை உத்தரவு பெறுவோம் என்றும் மனுதாரரின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

### வன்னி அகதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை தடுத்து நிறுத்துவதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தி வருகிறோம்.

இலங்கையில் வட பகுதியில் முகாம்களில் வைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்களை சர்வதேச தராதரத்துடன் நடத்துமாறு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை அரசுக்கு வலியுறுத்தி வருகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)


**விற்பனைக்கு**

CD 125 பென்லி கறுப்புநிற மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு

தொடர்பு - 0773561776

**புதிய வெளியீடு**

1. O/L வரலாறு - 2009
VCD யுடன் வெளிவந்துள்ளது - ஆக்கம் - V. தயாளன்
2. ICT - O/L - 2009
VCD யுடன் வெளிவந்துள்ளது - ஆக்கம் - M.ஜங்கரன்

ஏக விநியோகஸ்தர் :-அன்னை புத்தகசாலை யாழ்ப்பாணம் 222 9881

• நவீன கையடக்கத் தொலைபேசிகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
• தொலைபேசி உதிரிப்பாகங்கள்
போனுக்குப் பாட்டுகள், படங்கள், வீடியோ, போன் சொப்ட்வேர், அன்ரி வைரஸ், கேம்ஸ் ஏற்றித் தரப்படும்

அஸ்வினி மவ்ரி பிளாசா
72, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு
அழையுங்கள் : 021 567 7777

**வேலை ஆள்கள் தேவை**

சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள புடைவைக் கடை ஒன்றுக்கு பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 077 9124249

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

பொது உளச்சார்பு | பொது அறிவு

ஆரம்பம் - சனி (12.09.2009) 2 மணி

★ இலங்கை வங்கி ஆட்சேர்ப்பு மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கு ஏற்றது

(சனி, ஞாயிறு 2 மணி தொடக்கம் 5 மணி வரை)

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

Diploma Courses... பதிவுகளை 15 09 2009 முன்னர் செய்யுங்கள்

# Microsoft Office * English * Accounting
*DTP,Hardware * Web Developing
* Video Editing *AutoCAD * VB.net,LINUX

International Courses...
MCP_Microsoft Certified Professional
MCSE_Microsoft Engineer,CIMA,IELTS
Sun Java programmer,Cisco-CCNA,ICDL

Degree Course * BIT Semester 1,3 & 5,Project

மேலதிக விபரங்களுக்கு நேரில்
324, பலாலி வீதி,யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில், MCS
Bus Route - 764 0772395895 Supported By UNDP/JRRP

**SHAMROCK**
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்

A/L 2010 Paper Class
• B.St - B.s.பசீல் wed.4p.m, sat 7am
• Acc - S.தவா Tue,Thur.4p.m
• Econ - N.B.கஜீதரன் Mon,Fri. 5pm
• Eng - G .Ranjit sat,8am.sun5pm

SCC

2009 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம் 12,14.09.2009

விசேட கணனிப் பயிற்சி நெறிகள்

| | |
|---|---|
| Dip. In MS Office | 4 Months |
| Dip. In Desktop Publishing | 4 Months |
| Dip. In Computer Programming | 6 Months |
| Dip. In Eng. Drawing & Auto CAD | 3 Months |
| Dip. In Computerized Accounting | 4 Months |
| Dip. In Data Base Management System | 4 Months |
| Dip. In Audio & Video Editing | 4 Months |
| Dip. In Visual Basic | 4 Months |
| Dip. In Web Designing | 4 Months |

Free
Dip. In Hardware Engineering
Dip. In Internet e-mail

மேலதிக விபரங்களுக்கு

ONLINE CLASSESக்கும் மாணவர் அனுமதிக்கப்படுவர்

4000/=

Softview Computer College
55, Arasady Rd, Jaffna. T.P: 021 2225170


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.